Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :275 ஆவணி 15 ஆம் நாள் திங்கட்கிழமை 31 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

கீரைக்கடைக்கு எதிர்க்கடை வேணும் எண்டதை உவை முன்னணிக்காரர் பிழையா விளங்கிட்டினம் கண்டியளோ

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

## சவேந்திர சில்வா விசாரணைக்கு உட்படுத்தப்படாமை கேலிக்குரியது

சாடுகிறது ஐ.ரி.ஜே.பி.

ஜொகனஸ்பேர்க், ஓக. 31

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி நூற்றுக்கும் மேற்பட்டோர் இராணுவத்தினரிடம் சரணடைந்தமைக்கு கண்கண்ட சாட்சியங்கள் உள்ளன. இந்த விவகாரம்

19

## காணாமல் ஆக்கப்பட்டோர் என்று எவரும் இலங்கையில் இல்லை

மஹிந்த அரசு எகத்தாளம்

கொழும்பு, ஓக. 31

இலங்கையில் 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்' என்று எவரும் இல்லை. அப்படிக் கூறப்படுவோர் போரில் உயிரிழந்திருக்கலாம் அல்லது வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் அல்லது தனிப்பட்ட நபர்களினால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டி

19

### யாழ்.நகர்ப் போராட்டத்தில் மணிவண்ணன் பங்கேற்பு



யாழ்ப்பாணம், ஓக. 31

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டத்தைக் குழப்பியடித்து தனித்துப் போராட்டத்தை நடத்திய

19

காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் உறவுகளின்

# அழுகுரல்களால் நேற்று அதிர்ந்தது தமிழர் தாயகம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 31

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புறவுகளைத் தேடும் உறவினர்களால் வடக்கு, கிழக்கு தமிழர் தாயக தேசம் எங்கும் நேற்று மாபெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பிரதான போராட்டங்கள் நடத்தப்பட்டன. அரசால் ஏற்படுத்தப்பட்ட தடைகளால் துவண்டு போகாமல், தமது உறவுகள் எங்கே என்று கத்திக் கதறி அழுதனர்.

சிறிலங்கா அரச படைகள் குடாநாட்டை ஆக்கிரமித்த 1996ஆம் ஆண்டு காலப்

15



### யானை தாக்கி 3 பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு

மன்னார், ஓக. 31

மடு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட முள்ளிக்குளம் காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு யானை

19

போதனா மருத்துவமனையில்

### 4ஆம் மாடியிலிருந்து வீழ்ந்த பெண்ணின் சாவில் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நாலாம் மாடியிலிருந்து வீழ்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவமனைத் தரப்பு தெரிவித்தது.

சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடும் பெண் வீழ்ந்தபோது

19

### கொரோனா 3000

கொழும்பு, ஓக. 31

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 10 ஆக அதிகரித்துள்ளது.

19

### பேராசிரியரானார் மருத்துவர் குமணன்

யாழ்ப்பாணம், ஓக. 31



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ கலாநிதி பட்டம் பெற்று அதே பல்கலைக் கழகத்தின் மருத்துவத் துறை பேராசிரியராக பதவி பெற்றவர் என்ற பெருமையை

15

### வடக்கில் பணிபுரியும் தாதியர்களில் 60 சதவீதமானோர் சிங்களவர்கள்!!!

யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளில் பணிபுரியும் தாதியர்களில் 60 தொடக்கம் 65 சதவீதமானவர்கள் சிங்களவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தமிழ் தாதியர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதாகச்சுட்டிக்காட்டப்படுகின்றது. வடக்குமாகாண சுகாதாரத்திணைக்களத்துக்கு உட்பட்ட மாவட்ட, பிராந்திய மருத்துவமனைகள்

15

### உறவுகளைக் காணாமல் ஆக்கிய சிலர் தற்போது எம்.பி. பதவிகளில்

நீதி கிடைக்கும்வரை போராட்டம் தொடர வேண்டும் என்கிறார் சம்பந்தன்

திருகோணமலை, ஓக. 31

தமிழர் தாயகத்தில் எமது உறவுகளை வலிந்து காணாமல் ஆக்கியோரில் சிலர் தற்போது ஆளுந்தரப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர். அதேவேளை, சிலர் அரசில் முக்கிய பதவிகளிலும் உள்ளனர். மஹிந்த அரசுக்கும் இந்த விவகாரத்துடன் நேரடித் தொடர்பு உண்டு. எனவே, அரசு பொறுப்புக் கூறும்வரை காணாமல்

19

காணாமல் ஆக்கப்பட்டோர்


### போராட்டத்தைக் குழப்பியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், ஓக. 31

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளின் போராட்டம் யாழ்ப்பாண நகரத்தில் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்ற வேளையில் அதனைக் குழப்பியடிக்கும் வகையில், ஒற்றுமைக்கு வேட்டு

19

# உறவுகளைத் தேடி...


UN!





















Where is
Rev. Fr. Francis Joseph
Refer Srilanka
to the International
Criminal
Court









# "கோத்தா அரசே! நீ கொண்டுபோனவர்கள் எங்கே?"

## உறவுகள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஒக. 31**
**காணாமலாக்கப்பட்டவர்களின் யாழ்ப்பாண மாவட்ட உறவுகள், 'கோத்தா அரசே! நீ கொண்டுபோனவர்கள் எங்கே?" என்பது உட்பட பல்வேறு வாசகங்களை ஏந்தியவாறு நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக உறவுகள் ஒன்று கூடி பேரணியாக ஆஸ்பத்திரி வீதி ஊடாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக முன்றலை அடைந்து கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினமான நேற்று அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் மனித உரிமைகள் ஆணையகத்தின் உயர்ஸ்தானிகருக்கான மனுவை அனுப்புவதற்காக அருட்தந்தையர்களான சின்னத்துரை லீயோஆம்சொங், ம.ரெக்ஸ் மற்றும் அருட்சகோதரி அன்ரனிற்றா ஆகியோரிடம் கையளித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், 'கோத்தா அரசே நீ கொண்டு போனவர்கள் எங்கே?, உங்கள் இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்?, கொலைகாரன் நீதி வழங்க முடியாது, சர்வதேசமே! எம் கண்முன்னே இழுத்துச் செல்லப்பட்ட எமது உறவுகளைத்தேடி பத்தாண்டுகளாக கண்ணீரோடு நாம்." என்பன போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும்,'வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே?, என்றவாறு பல கோசங்களை எழுப்பியவாறும் பேரணியில் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக பொதுமக்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (கு-20)




# கிளிநொச்சியில் எழுச்சியாக உறவுகளின் போராட்டம்

கிளிநொச்சி, ஒக. 31
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கிளிநொச்சி உறவுகளின் பேரணி மற்றும் போராட்டம் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக பேரணியாக ஆரம்பித்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் முன்பாக சென்றடைந்து அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட உறவுகள் கலந்து கொண்டனர், பல்வேறு கோஷங்களையும் எழுப்பினர். இந்தப் போராட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொண்டிருக்கவில்லை. போராட்ட இறுதியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மைக்கேல் பேச்லெட் ஜெரியாவுக்கு இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு துரிதமாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தவும் என்ற தலைப்பிலான மனு அனுப்பப்பட்டது. (த-6)

# முல்லைத்தீவு போராட்டத்தில் பிள்ளைகளும் களமிறங்கினர்



முல்லைத்தீவு, ஒக. 31
காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது பெற்றோர்களுடன் தந்தைமாரைத் தேடும் பிள்ளைகளும் போராட்ட களத்தில் குதித்தனர்.

அரச படைகளாலும் துணை இராணுவக் குழுக்களாலும் இறுதிப்போரின் போது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர். சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நாளான நேற்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு பேருந்து நிலையத்துக்கு முன்பாக அவர்கள் பேரணியாகப் புறப்பட்டு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக சென்றடைந்து அங்கு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும், சர்வதேச நீதிவேண்டும், காணாமற்போனோருக்கான அலுவலகத்தை நிராகரிக்கின்றோம், காணாமலாக்கப்பட்டோரை கண்டறிய சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை, வேண்டும், சர்வதேச விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக மேற்கொள்ளப்படவேண்டும், கலப்புப் பொறிமுறை வெறும் கண்துடைப்பு போன்ற பதாதைகளை தாங்கியவாறு அவர்கள் பேரணி மற்றும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். இதன்போது ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் ஊடாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கை வாசிக்கப்பட்டது. (கு-19)

# பொலிஸாரின் தடையை மீறி மட்டக்களப்பில் போராட்டம்



மட்டக்களப்பு, ஒக. 31
பொலிஸாரால் பெறப்பட்டதாகக் கூறப்படும் நீதிமன்றத் தடையையும் மீறி, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் மட்டக்களப்பில் நேற்று போராட்டத்தில் குதித்தனர்.

கல்லடிப் பாலத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி மட்டக்களப்பு காந்தி பூங்கா வரை வந்தடைந்து அங்கு போராட்டமாக நடைபெற்றது.

வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அ.அமலநாயகி தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணியில் அவருக்கெதிராக நீதிமன்றத் தடை உத்தரவை பொலிஸார் பெற்றிருந்தனர். அதனால் உறவுகளின் அம்பாறை மாவட்டத் தலைவி செல்வராணி தலைமையில் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பேரணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க பிரதிநிதிகள் மூன்று மாவட்டங்களில் இருந்தும் கலந்து கொண்டிருந்தனர்.

அவர்களுடன் மதத்தலைவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வாலிபர் முன்னணி உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் ஏனைய அரசியற் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (கு-150)

## ஆடை இறக்குமதிக்குத் தடை

*இராஜாங்க அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு*

வெளிநாடுகளிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்வதை முற்றாகத் தடை செய்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவிப்பு வெளியிட்டுள்ளார் என கைத்தறி நெசவு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெறும் கண்காட்சியை நேற்று முன்தினம் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இறக்குமதி தற்போது பெருமளவில் குறைந்துள்ளது. ஏற்றுமதியும் பெருமளவில் குறைந்துள்ளது. இலங்கையில் எமது தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய வளங்களை வலுப்படுத்தி அவற்றைப் பாதுகாத்து எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்யும் சூழலை ஏற்படுத்த வேண்டும். தேசிய ஆடை உற்பத்தியாளர்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு கட்டாயம் செல்ல வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்வதை நிறுத்த ஜனாதிபதி கோத்தாபய அறிவிப்பு வெளியிட்டுள்ளார். தேசிய ரீதியில் புதிய ஆடை தொழிற்சாலைகளை ஆரம்பிக்க தேவையான சூழலை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம், என்று தயாசிறி குறிப்பிட்டார். (ஓ,5)

## எச்.ஐ.வி.நோயால் பாதிக்கப்படும்
# ஆண்கள் அதிகரிப்பு



கொழும்பு, ஓக.31

**இலங்கையில் எச்.ஐ.வி தொற்று நோயால் பாதிக்கப்படும் ஆண் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது எனத் தேசிய எஸ்.டி.டி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் இயக்குநர் வைத்தியர் ராசஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 19முதல் 25 வயது வரையான எச்.ஐ.வி உறுதியான ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

நாடு முழுவதும் எச்.ஐ.வி நோயாளிகள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் குறித்து தேசிய எஸ்.டி.டி. எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளைத் தொடர்ந்து புள்ளிவிவ ரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஆண் நோயாளிகளின் எண்ணிக்கையில் படிப்படியான உயர்வு காணப்பட்டுள்ளது. அத்துடன், இந்த ஆண்டு (2020) நிலவரப்படி இலங்கையில் 3600 எச்.ஐ.வி தொற்று உறுதியான நோயாளிகள் இருக்கின்றனர் என சுட்டிக்காட்டியுள்ள அவர், நேர்மறை நோயாளிகள் 2000 பேர் மட்டுமே தேசிய எஸ்.டி.டி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மீதமுள்ள 1600 பேர் சிகிச்சைபெறாமல் சமூகத்தின் மத்தியில் இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ள அவர், அந்நோயாளிகளால் மற்றவர்களுக்கு வைரஸ் பரவும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாகவும் வைத்தியர் ராசஞ்சலி ஹெட்டியாராச்சி மேலும் கூறியுள்ளார். (ந-இ)



# 1000 ரூபா பிரச்சினை ஒரே பேச்சில் தீரும்

கொழும்பு, ஓக.31

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பளம் தொடர்பாக இழுபறியின்றி ஒரே பேச்சில் தீர்வு காணப்படும் என்று இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 107ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெருந்தோட்டங்களில் அரைநாள் பெயரில் சம்பளம் வழங்குவது தொடர்பாக எந்தச் சட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை.

ஆரம்ப காலம் முதல் அந்த நடைமுறையைப் பின்பற்றி வருவதால் அது தற்போதும் தொடரப்படுகிறது. அரைநாள் பெயரில் சம்பளம் வழங்கப்படுமாயின், அது தொடர்பாக அறிவித்தல் வழங்கினால் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் -என்றார். (ஐ)



## உளவியல் மேம்பாட்டு செயற்றிட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான இரு நாள் உளவியல் மேம்பாட்டு செயற்றிட்டம் வவுனியா வரோட் அமைப்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் 12 முதல் 15 வயது வரையான மாணவர்களுக்காக மனித தேவைகளும் விருப்பங்களும் கிரகித்தல் இயலளவு வழிகாட்டல் குழுச்செயற்பாடு கொரோனா விழிப்புணர்வு நாடகம் குழுப் பண்புகள் பொது அறிவின் முக்கியத்துவம் எனும் தலைப்புக்களுடனும், 16 முதல் 18 வயது வரையான மாணவர்களுக்காக தலைமைத்துவம் புத்தாக்க செயற்பாடுகள் மற்றும் சவால்களுக்கு முகம் கொடுத்தல் எனும் தலைப்புகளுடனும் செயற்றிட்டம் நடைபெற்றது. மாணவர்களின் செயற்பாடுகளை மேம்படுத்தும் விதமாக இந் நிகழ்வில் இடையிடையே புத்துணர்வூட்டும் விளையாட்டுக்கள் மற்றும் குழுச் செயற்பாடுகளும் இடம் பெற்றன. நிகழ்வில் உளவள ஆலோசகர்களான அன்டனி பிரசன்னா மற்றும் திருமாள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ந-222)

*சாவ. வைத்தியசாலையில்*

## குழந்தை மருத்துவ நிபுணர் இல்லாததால் பெரும் சிரமம்

சாவகச்சேரி,ஓக.31

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குழந்தை மருத்துவ நிபுணர் இன்மையால் சிகிச்சை பெற வருவோர் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியின் பெரிய வைத்தியசாலையான சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு பூநகரி, வரணி, புத்தூர், நாவற்குழி ஆகிய பிரதேசங்களிலிருந்து நோயாளர்கள் குழந்தை நலச் சிகிச்சைக்காக வருகின்றனர். அந்த வைத்தியசாலையில் கடமையாற்றிய குழந்தை மருத்துவ நிபுணர் பணியிட மாற்றம் பெற்று யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். எனினும் அவருக்குப் பதிலீடாக எந்தவொரு மருத்துவரும் நியமிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது மருத்துவ நிபுணர் ஒருவரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றார். (ப159)

## 20இலும் இருக்கும் 19 இன்அம்சங்கள்

கொழும்பு, ஓக. 31

19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கும் போது அதில் உள்ள இரண்டு சிறப்பான விடயங்களை 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அமுல்படுத்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதிர்பார்த்துள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது;

மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை நேற்றுச் சந்தித்த அவர் கண்டியில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

தனிப்பட்ட அரசியல் காரணங்களுக்காகவே 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. எனினும் அதில் சில சிறந்த விடயங்கள் உள்ளன. குறிப்பாக ஜனாதிபதியின் பதவிக்காலத்தைக் குறைத்தமை, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய தவணை குறைத்தமை என்பன சிறந்தவை. இந்த இரண்டு விடயங்களை அப்படியே தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு. மேலும் புதிய அரசமைப்புத் திருத்தச்சட்டத்தின் உள்ளடக்கம் பற்றி தற்போதே எதிர்வு கூற முடியாது என்றார். (பதி)

# இலங்கைக்கு கனடா ஆதரவளிக்கும்
## கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.31

சுபீட்சமான நல்லிணக்கமுள்ள இலங்கைக்கு எமது நாடு ஆதரவளிக்கும் என்று கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் தெரிவித்துள்ளார்.

கனேடிய உயர்ஸ்தானிகர் இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்து தேர்தல் வெற்றி தொடர்பில் தமது வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்ட போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்தும், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சந்திப்பு சுமுகமாக இருந்தது என்று இருவரும் டுவிட்டரில் பதிவிட்டுள்ளனர். (ரு-

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்களின் போராட்டங்களை மலினப்படுத்தாதீர்!

ஒரு வெற்றுச் சுவரில் வரையப்பட்டுள்ள கோடு ஒன்றை அதை அழிக்காமலேயே பார்வைப் புள்ளியில் இருந்து மறையச் செய்ய ஒரு வழி இருக்கின்றது. அந்தக் கோட்டுக்குப் பக்கத்திலேயே அதைவிடப் பெரியதாக இன்னொரு கோட்டை வரைய வேண்டும். இப்போது பார்வையின் மையப்புள்ளி சிறிய கோட்டில் இருந்து இடம்மாறி பெரியகோட்டுக்குத் தாவிவிடும். இதுவரை கண்ணுக்குத் தெரிந்த அந்தச் சிறியகோடு பார்வைப் புள்ளியைவிட்டு விலகுவதால் அது நம் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அந்தக் கோடு தொடர்ந்து இருக்கவே செய்கின்றது. இதை பெரியகோடு – சின்னக்கோடு முறைமை என்பார்கள்.

ஆனால், இந்த முறைமையை எதிர்வளமாக பிரயோகித்தே தீருவோம் என்று சிலர் கங்கணங்கட்டி நிற்கின்றனர். அதாவது பெருங்கோடு ஒன்றை மறையைச்செய்ய கவனக் கலைப்பானாக பக்கத்தில் ஒரு சிறிய கோட்டை வரைய முனைகின்றார்கள். அப்படித்தான் நேற்றைய காணாமல் போனோர் விவகாரத்தையும் வழக்கம்போல பிசுபிசுக்க வைக்க ஒரு கட்சி முனைந்துள்ளது. ஏற்கனவே இதே கட்சிதான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் பிரிவினையைக் கொண்டுவந்திருந்தது. பொதுமக்களும் அமைப்புகளும் ஓரிடத்தில் நினைவேந்தலை ஒழுங்குசெய்திருக்க இந்தக் கட்சியினரோ பிரதான நினைவேந்தல் நடைபெறும் இடத்தில் இருந்து விலகி வேறொரு இடத்தில் தாம் தனித்து அந்த நாளைக் கடைப்பிடித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் பொதுமக்களும் அரசியல் கட்சியினரும் இணைந்து மிகப் பெரியஅளவில் கவனவீர்ப்புப் போரொன்றை யாழ்மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மாவட்டச் செயலகம் வரை நேற்று நடத்தியிருந்தனர். இதன்போது கட்சிபேதமின்றி அரசியல்வாதிகளும் இணைந்துகொண்டனர். ஆனால் இப்படி பேரெழுச்சியோடு நடைபெறும் நிகழ்வுக்குப் போவது தீட்டு என்று கருதிய ஒரு கட்சி மாத்திரம் அந்தப்பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. மாறாக இந்தப் பேரணி நடைபெற்ற சில மணித்துளிகளில் கிட்டுப்பூங்காவில் அவர்கள் இன்னொரு கவனவீர்ப்புப் போரை நடத்தியிருந்தனர். இப்படி ஒரு பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் கூட்டுத்துயர்க் குரலை அர்த்தம் இழக்கச் செய்யும் அபத்தக் காரியங்களை இந்தக் கட்சி ஏன் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது என்பது பலருக்கும் புரியவில்லை.

ஒருவேளை 'நாங்கள் மற்றையவர்களை விட தனித்துவமானவர்கள்' என்று காட்டுவதற்காக இப்படித் தனிவழி செல்வதாக நினைத்து குறுக்கால் போகும் வேலைகளை வலிந்து செய்கின்றனர் போலும். ஆனால் தனித்துவம் என்பது நம்முடைய செயல்களின் அடிப்படையில் அடுத்தவர்கள் தீர்மானிப்பதே தவிர, வலிந்து நாங்கள் செய்வது எல்லாமே தனித்துவமானது என்று நம்பவைக்க முனைவது ஆபத்தான அரசியல். இந்த ஆபத்தான அரசியலைத்தான் அந்தக் கட்சி தொடர்ச்சியாகச் செய்கின்றது. அதுவே சரியெனவும் நம்புகின்றது. ஆனால் உண்மையில் ஓர் இனத்தின் கூட்டுவலியின் வீரியத்தை குறைக்கச் செய்யும் வேலையையே அது செய்துகொண்டிருக்கின்றது. அரசியல் சார்ந்த செயற்பாடுகளில் வேண்டுமானால் இந்தப் பிரிவினை பொருத்தமானதாக இருக்கலாம். **ஆனால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்பவை தமிழினத்தின் உணர்வுசார் விடயங்கள். இதிலும் நாங்கள் அரசியல் செய்யத்தான் போகின்றோம் என்று அடம்பிடிப்பது மக்கள் போராட்டங்களை மழுங்கடிப்பதாகவே அமையும். உங்களின் வாக்கரசியலுக்காக மக்களின் போராட்டங்களை இனியும் மலினப்படுத்தாதீர்!.**

### 3 தசாப்தங்களுக்கு பின்னர்

# மாகாணசபைத் தேர்தலில் ஏற்படவுள்ள மாற்றம்!

**கொழும்பு, ஓக. 31**

**இலங்கை அரசியல் வரலாற்றில், மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு இரு புதிய அரசியல் கட்சிகளின் அரசியல் அதிகாரப் போட்டிக்கு மத்தியிலேயே இம்முறை மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.**

இலங்கையில் 1988 ஏப்ரல் 28ஆம் திகதியே முதன்முதலாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டது. வடமேல், வடமத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்கே அந்தத் தினத்தில் தேர்தல் இடம்பெற்றது. அந்தத் தேர்தலில் களமிறங்கி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக்கட்சி நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளது.

'ஆளுங்கட்சி', 'பிரதான எதிர்க் கட்சி' என்ற இரு அந்தஸ்துகளையும் அக்கட்சி இழந்துள்ளது. எனவே, மாகாணசபைத் தேர்தலில் 'பிரதான' எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி களமிறங்கவுள்ளது. 1988இல் நடைபெற்ற பொதுத்தேர்தலை சுதந்திரக்கட்சி புறக்கணித்திருந்தாலும் அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் அது போட்டியிட்டது. மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தையும் சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணி கைப்பற்றியிருந்தது. கடைசியாக நடைபெற்ற தேர்தலில்கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களைத்தவிர்ந்த ஏனையவற்றை சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே கைப்பற்றி ஆட்சியமைத்தது. எனினும், அக்கட்சியும் இன்று 'ஆளும்கட்சி, 'பிரதான எதிர்க் கட்சி' என்ற அந்தஸ்தை இழந்துள்ளது. அது இம்முறை மொட்டுகட்சியுடன்இணைந்தே போட்டியிட உத்தேசித்துள்ளது. ஆகவே, ஆளுங்கட்சி என்ற அந்தஸ்த்துடன் பெரமுனவே போட்டியிடவுள்ளது. கடைசியாக நடைபெற்ற தேர்தலில் வடக்கு மாகாணசபையின் ஆட்சி அதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், கிழக்கு மாகாணசபையின் அதிகாரத்தை முஸ்லிம் காங்கிரசும் வகித்திருந்தன. (ம-44)

## இலங்கையில் அனல் நிலை!

கொழும்பு, ஓக. 31

இலங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சூரியன் உச்சமடைய ஆரம்பித்துள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாட்டில் எதிர்வரும் 11 நாள்களுக்கு சூரியன் உச்சம் கொடுப்பதன் காரணமாக வெப்பநிலை 38 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கவுள்ளது. நேற்றையதினம் முல்லைத்தீவு மற்றும் அதற்கு அருகில் உள்ள பகுதி களில் சூரியன் உச்சம் கொடுத்துள்ளது.

வடக்கில் ஆரம்பமாகியுள்ள சூரிய உச்சம் எதிர்வரும் 7ஆம் திகதி வரை நாடு முழுவதும் இருக்கும் - என்றுள்ளது. (ம-இ)

## கொழும்பின் துணைஆயராக ரஞ்சித் ஆண்டகை திருநிலை

கொழும்பு, ஓக. 31

கொழும்பு மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக பேரருட்திரு அன்டன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை நேற்று திருநிலைப்படுத்தப்பட்டார்.

கொழும்பு லூசியாஸ் பேராலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஆயத்துவ திருப்பொழிவு திருப்பலி வழிபாட்டின்போது கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் அவர் திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஜூலை மாதம் 13ஆம் திகதி திருத்தந்தை பிரான்ஸிஸ் இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பை வத்திக்கானிலிருந்து வெளியிட்டிருந்த நிலையில் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் நேற்று திருநிலைப்படுத்தப்பட்டார். (ம-இ)

# கோப் தலைமையும் ஆளுங்கட்சி வசமே!

கொழும்பு, ஓக. 31

'கோப்' என்றழைக்கப்படும் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் தலைவராக ஆளுங்கட்சி அமைச்சரொருவரே நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது. நாடாளுமன்றத்தில் செயற்படும் குழுக்களில் மிகமுக்கிய குழுவாக கோப்குழு கருதப்படுகின்றது. கடந்த ஆட்சியின்போது இந்தக் குழுவின் தலைமைப்பதவி எதிரணி உறுப்பினராக இருந்த சுனில் ஹந்து னெத்திக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனை அடிப்படையாகக்கொண்டு அந்தப் பதவியை இம்முறை எதிரணிக்கு வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி சபையில் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், இதற்கு ஆளுங்கட்சி உடன்படவில்லை எனவும், அமைச்சர் ஒருவருக்கே அப்பதவி வழங்கப்படவுள்ளது எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அத்துடன், அரச கணக்குக் குழுவின் தலைமைப்பதவியும் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவருக்கே வழங்கப்படவுள்ளது. 8ஆவது நாடாளுமன்றத்தில் இக்குழுவின் தலைவராக லசந்த அழகியவன்ன செயற்பட்டார். அவர் அப்போது சுதந்திரக்கட்சியின் சார்பில் அர சாங்கத்துடன் இணைந்திருந்தார். இம்முறை மொட்டுக்கட்சி உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார். (ம-44)

# சஜித் அணியுடன் கூட்டுசேரத் தயார்

ருவான் விஜேவர்தன அறிவிப்பு

**கொழும்பு, ஓக. 31**
**ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கூட்டணியாக செயற்படுவதற்கு தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன இன்று தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி தன்னிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள ருவான், அதனை பெற்றுக்கொள்வதற்கான நகர்வுகளிலும் ஈடுபட்டுள்ளார். இந்த நிலையில் நேற்று முற்பகல் கண்டிக்குப் பயணம் மேற்கொண்ட அவர் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்றார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் அவர் தெரிவித்ததாவது:

'ஐக்கிய தேசியக் கட்சிக்கு இளம் தலைவரொருவர் தேவை என்று மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். அதனை ஏற்று தலைமைப்பதவிக்கு நானும் போட்டியிடுகின்றேன். அடுத்த வாரம் கட்சியின் செயற்குழு கூடும்போது இறுதி முடிவெடுக்கப்படும். கலந்துரையாடல் மூலம் புதிய தலைவரை தெரிவு செய்யமுடியாமல்போகும் பட்சத்தில் வாக்கெடுப்புமூலம் தேர்வு இடம்பெறும்.' என்றார்.

அத்துடன் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பதவி வழங்கப்பட்டால் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயாரா என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ருவான் விஜேவர்தன,

'ஆம். ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்தவர்கள்தான் இன்று அந்த பக்கம் இருக்கின்றனர். எனவே, கூட்டணியாக இணைந்து செயற்படுவதில் எவ்வித பிரச்சினையும் இருக்காது. பேச்சு நடத்தி, உரிய வகையில் பயணத்தை மேற்கொள்ளலாம்.' என்றார். (ம-44)

## நீரில் மூழ்கி ஒருவர் சாவு

மஹியங்கனை, ஓக.31
மஹியங்கனை பகுதியிலுள்ள குளமொன்றில் நீராடச் சென்ற ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கண்டி மடுல்கலை கலாபொக்க தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர், தனது தாய் மற்றும் மனைவியுடன், மஹியங்கனைக்குச் சென்றிருந்த நிலையில், இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் மஹியங்கனை பொது வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ற)

## வாக்காளர் பட்டியலை திருத்த நடவடிக்கை!!

கொழும்பு, ஓக. 31
2021ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான விண்ணப்பப்படிவங்களை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த நடவடிக்கை நாளை முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய குறித்த விண்ணப்பப் படிவங்கள் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது தெரிவிக்கப்படுகிறது.


அத்துடன், தேசிய அடையாள அட்டையை வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும் தங்களது பெயரை தேர்தல் பட்டியலில் இணைத்துக் கொள்ளுமாறும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கமைய, கிராம உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் பீ.சி. படிவத்தை பூர்த்திசெய்து சமர்ப்பிக்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் வாக்காளர் பட்டியலை உறுதி செய்யும் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-இ)

## நாளாந்தம் 800 பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை

போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.31
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய 800 பஸ்கள் நாளாந்தம் சேவையில் ஈடுபடுவதில்லை என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

சாரதிகளுக்கான வெற்றிடம் நிரப்பப்படாமை காரணமாகவே இந்தச் சேவையில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

தற்போது வரை 300 சாரதிகள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்கள் விரைவில் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கும் தட்டுப்பாடு காணப்படுகின்றது என, தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்றுக் காரணமாக சொந்த இடங்களுக்குச் சென்ற தனியார் பஸ் பணியாளர்கள் மீண்டும் பணிகளுக்குத் திரும்பவில்லை.

தனியார் பஸ்களின் வருமானம் குறைவடைந்துள்ளமையே பணியாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பாமைக்கான காரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

## நடைபாதை வியாபாரிகளால் போக்குவரத்துக்கு இடையூறு

கரணவாய், ஓக. 31
கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் முன்பகுதியை நடைபாதை வியாபாரிகள் சிறிது சிறிதாக ஆக்கிரமித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நெல்லியடி மத்திய சந்தைப்பகுதியில் சட்டத்துக்கு முரணாக இயங்கி வந்த நடைபாதை புடவை வியாபாரிகளை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினர் வெளியேற்றிருந்தனர்.

தற்போது பிரதேச செயலகத்தின் வாயிலுக்கு அண்மையில் அவர்கள் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தப் பகுதியில் ஆரம்பத்தில் ஒரு பழக்கடை நடத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது இரண்டு நடைபாதை புடவை வியாபாரிகள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த இந்தப்பகுதியில் பிரதேச செயலகத்துக்கு நாளாந்தம் பெருமளவிலான அலுவலர்களும் பொதுமக்களும் வந்து செல்வதால் போக்குவரத்து நெருக்கடி உள்ளது என்றும் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்படுகின்றது. (த-108)



## நேருக்கு நேர் பஸ் மோதி 18 பேர் காயம்

காலி, ஓக.31
காலி தடல்ல பிரதேசத்தில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 18 பேர் காயமடைந்துள்ளனர். மாத்தறையில் இருந்து பொலனறுவை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றும், அம்பலாங்கொடையில் இருந்து காலி நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அந்தத் தனியார் பேருந்து முன்னால் பயணித்த மற்றொரு பேருந்தை முந்திச் செல்ல முற்படுகையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் தனியார் பேருந்தின் சாரதியின் கால்ப் பகுதி பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளது என அறிய முடிகிறது. (வ)

## க.பொ.த. விண்ணப்பகால எல்லை இன்றுடன் நிறைவு

கொழும்பு, ஓக.31
க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை இன்றுடன் நிறைவடைகின்றது.

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.doenets.lk ஊடாக சமர்ப்பிக்க முடியும்.

அத்துடன், இணையத்தளம் மூலம் விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பத்தை அச்சிட்டு தபால் மூலம் அனுப்பி வைப்பது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# விமான நிலையத்தை மீண்டும் திறக்க பல தரப்பினருடனும் கலந்துரையாடல்

சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.31
இலங்கையில் கொரோனா வைரஸ் காரணமாக மூடப்பட்டிருந்த விமான நிலையத்தை மீண்டும் திறப்பதற்கு பல தரப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸால் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதனால் எதிர்வரும் மாதம் விமான நிலையங்களைத் திறப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதற்கு முன்னர் விமான நிலையத்தை திறப்பதற்கு பல தடவைகள் தீர்மானிக்கப்பட்ட போதும், அதனை நடைமுறைப்படுத்தவில்லை. அயல் நாடான இந்தியாவில் கொரோனா வைரஸ் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து வருவதால், விமான நிலையத்தை திறப்பது தாமதம் அடையும் என அறிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ற-இ)

# மக்கள் அபிவிருத்தியை நோக்கி நகர்கின்றனர்!

## ஈழவர் ஜனநாய முன்னணியின் உபதலைவர் தெரிவிப்பு

**வவுனியா, ஓக. 31**

**தமிழ் மக்கள் அபிவிருத்தியை நோக்கி நகர்வதை நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன என்று தெரிவித்தார் ஈழவர் ஜன நாயக முன்னணியின் உபதலைவரும், பிரதேச சபை உறுப்பினருமான வி.சசிதரன்.**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் நிர்வாக ரீதியில் சில மாற்றங்களை ஏற்ப டுத்தி கட்சியை முன்னகர்த்திச் செல்வதற்குத் தீர்மானித்துள்ளோம். கடந்த தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் கைகோர்த்து ஒரு நாடாளுமன் றப் பிரதிநிதித்துவத்தைப் பெற் றுக்கொள்வதற்கு சிறிய பங்க ளிப்பை வழங்கியிருந்தோம். அதுபோல எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். அது தொடர்பான பேச்சுக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த தேர்தலில் கிழக்கு மாகாண மக்கள் தெளிவாக வாக்களித்துள் ளனர். அபிவிருத்தி மற்றும் அரசி யல் தீர்வுகளை மையப்படுத்தி அவர்கள் வாக்களித்துள்ளனர். யாழிலும் அவ்வாறான ஒரு நிலைமை காணப்பட்டிருந்தது. எனவே மக்கள் தாம் அபிவிருத் தியை நோக்கி நகர்வதை இந்தத் தேர்தலின் மூலம் உணர்த்தியுள் ளனர் என்றார். (ம-110)

## சிறுபோகச் செய்கைக்கு தண்ணீர் விநியோகம்

மன்னார், ஓக. 31

உயிலங்குளம் நீலாசேனைப் பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக பயிர் களுக்கான, தண்ணீர் நேற்று முதல் திறந்து விடப்பட்டுள்ளது என்று முருங்கன் நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

உயிலங்குளம் நீலாசேனைப் பகுதி விவசா யிகள், அந்தப் பகுதியில் செய்கை பண் ணப்பட்டுள்ள சிறுபோகப் பயிர்களுக்கான தண்ணீர் விநியோகம் தடைபட்டுள்ள மையை உரிய தரப்பினரது கவனத்துக்குக் கொண்டு சென்றதையடுத்து, அந்தப் பகு திக்கான தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கட்டுக்கரைக் குளத்தின் கீழ் உள்ள பிரதான வாய்க்கால்கள் நீர்க்கட்டு திருத்த வேலை கள் நடைபெறுகிறது.

மூன்று நாள்கள் திருத்த வேலைகளுக்காக தண்ணீர் பூட்டப்படுவது வழமை. அது மட் டுமல்லாது கால்நடைகள் குடிப்பதற்காகவும், கட்டுக்கரையில் இருந்து பதினோராம் கட்டை இரட்டைக்குளம், அச்சங்குளம் போன்ற பகுதிகளுக்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (க-213)



## வவுனியாவில் சுற்றுலா மையம்

வவுனியா, ஓக.31

படகுச் சவாரி உட்பட பல விளையாட்டுக்க ளைக் கொண்ட சுற்றுலா மையம் நேற்று வவுனியாவில் திறக்கப்பட்டது.

வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் வவுனியா நகரசபையினரின் படகுச் சவாரி உட்பட பல்வேறு செயற்றிட்டங்களை உள் ளடக்கி இந்த சுற்றுலா மையம் திறக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுலா மையத்தை வவுனியா நகரச பைத் தவிசாளர் இ.கௌதமன் நாடா வெட்டி திறந்தார்.

சுற்றுலா மையத்தில் படகுச் சவாரி, நீருக்கு நடுவில் பிரமாண்ட சிற்றுண்டிச்சாலை, சிறு வர்களுக்கான விநோத விளையாட்டுக்கள், 3 டீ சினிமா வீடியோ கேம்ஸ் என்பவை உள் ளாங்கியுள்ளன. (ஐ)

## உணவக உரிமையாளருக்கு ரூபா 25 ஆயிரம் தண்டம்

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் இயங்கிய, உண வகத்தின் உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் யாழ். நகரில் இயங்கும் குறித்த உண வகத்தைச் சோதனையிட்டார். இதன் போது பல சுகாதார குறை பாடுகளுடன் உணவகம் இயங்கி வந்தமை தெரியவந்தது.

இது தொடர்பாக யாழ்.மேல் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டது. உரிமையாளர் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காத காரணத்தால், நீதவானின் உத்தரவுப்படி உண வகம் மூடி சீல் வைக்கப்பட்டது.

இந்த நிலையில் சில தினங்களுக்குப் பின்னர் உணவ கம் திருத்தியமைக்கப்பட்டதால், சுகாதாரப் பரிசோதகரின் அறிக் கையைத் தொடர்ந்து, உணவ கத்தைத் திறப்பதற்கு மன்றால் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கி ழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. உண வகத்தின் உரிமையாளர் குற் றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து, நீதிவானால் 25 ஆயி ரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (சு-115)

## மசூதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்வு

கொழும்பு, ஓக.31

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாட்டில் மசூதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

அதன்படி அனைத்து மசூதிகளும் முன்பு போலவே முழு நேரமும் திறந்து வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மசூதிகளில் அமைந்துள்ள தண்ணீர் குழாய் கள் மற்றும் கழிப்பறைகளை வழிபாட்டாளர் களின் பாவனைக்காகத் திறப்பதற்கு அனு மதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் தண்ணீர் த் தொட்டிகளைத் தொடர்ந்தும் மூடி வைக்கு மாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார அதிகாரியின் வழிகாட்டு தல்கள் மற்றும் வழிமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத் தப்பட்டுள்ளது. (ஐ. இ)

## ஓய்வூதியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட ஓய்வூதி யர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளன. வவு னியா தமிழ் மகா வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் தாம் விரும்பிய இடங்களில் நடைபெறும் கலந்துரையாட லில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளரில் ஒருவரான ஓய்வு பெற்ற முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஆ. இளங்கோ அறிவித் துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 0772301500 முஹம்மது முக்தார், 0776047195 கம லேஸ்வரன், 0776183200 இளங்கோ ஆகியோருடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-39)



கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத் தும் முகமாக துன்னாலை கிழக்கு கமக்காரர் அமைப்பினர் செடிய காட்டு வடக்குப் பகுதி யில் முள்ளுக் கம்பி வேலி அமைக்கும் பணியை முன்னெடுத்துள்ளனர். (ஐ-108)

## மாவட்ட கூ.சபையின் பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை யின் பொதுச்சபை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் மாவட்டக் கூட்டுறவு அலுவலகர் இ.தயாபரன் முன்னிலையில் கூடியது.

பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய இயக்கு னர் சபைத் தெரிவு இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத்தின் தலைவர் தி. சுந்தரலிங்கம் மீண்டும் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாயண சங்கத்தைச் சேர்ந்த க.மகாதே வன் மற்றும் தெல்லிப்பழை பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நா.கணேசன் ஆகியோர் உப தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட னர்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவு சங் கத்தைச் சேர்ந்த ப.கேசவதாசன், உடுப் பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த த.கணேசமூர்த்தி, சாவகச்சேரி பல. நோக்குக் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த செ.மனேஸ்வரன், கொடிகாமம் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த க.துரைசிங்கம், பண்டத்தரிப்பு மகளிர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த திருமதி.ஜெ.யோசேவ், யாழ்ப் பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவைச் சேர்ந்த செ.ஜெயக்குமார் அம்பாள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த க.இராஜசந்திரன் ஆகியோர் சபையின் இயக்குநர்க ளாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-17)

## பண மோசடி: ஐவர் கைது

கனடாவில் தொழில் பெற்றுத்தரு வதாகக் கூறி பண மோசடி செய்த கட்டுநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 5 பேர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர். அவரது விளம் பரத்திற்கு ஏற்ப தொடர்பு கொண்ட வர்கள், வங்கிக்கணக்குகளைத் திறந்து கடவுச்சீட்டு மற்றும் பிறப் புச் சான்றிதழின் நகல்களை மட் டும் சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டுள்ளனர். இதையடுத்து அந்தப் பெண் போலி ஆவணங்க ளைப் பயன்படுத்தி, வைப்புத்தொ கையாளர்களின் வங்கிக் கணக்கு களில் இருந்து பணத்தை எடுத் துள்ளார் (ந-இ)

## சனசமூக நிலையம் நாளை திறப்பு

மல்லாகம், ஓக.31

மல்லாகம் பகுதியில் காளிகாதேவி சனசமூக நிலையம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி. வடக்கு பிரதேசசபை தவிசாளர் எஸ்.சுகிர் தன், சிறப்பு விருந்தினராக மல்லாகம் கிராம அலுவலர் பி.சுஜந்தி, கௌரவ விருந்தினராக சமூர்த்தி அலுவலர் எஸ்.தயாபரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் ஆசியுரையை ந.ஸ்ரீதரஷர்மா நிகழ்த்தவுள்ளார். (ஐ)

# சமாதானம் வேண்டி தனிநபரால் நடைபயணம்



கிளிநொச்சி, ஓக.31

இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று வேண்டி காலியை சேர்ந்த நபர் ஒருவர் நடைப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

காலியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைப் பயணம் நேற்று கிளிநொச்சியை வந்தடைந்தது.

இலங்கைத் தேசிய கொடியை கையில் ஏந்தியவாறு தனி நபராக காலியில் இருந்து நடைப் பயணத்தை மேற்கொண்டுள்ள சுப்ரமணியம் பாலகுமார் என்பவர் நேற்று கிளிநொச்சி வந்தடைந்தார்.

நடைப்பயணம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுப்ரமணியம் பாலகுமார் 'இந்த நடைபயணம் காலி மாவட்டத்தில் இருந்து இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள நாகா விகாரரையை வந்தடைந்து மீண்டும் காலியைச் சென்றடைய வுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி இராணுவம், பொலிஸாரின் ஆதரவுடன் இப்பயணத்தை ஆரம்பித்தேன். சுனாமி நேரத்தில் என்று வீடு அழிந்துள்ளது. 12 வருடம் கூலி வேலை செய்தே வாழ்கின்றேன். நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற பொறுப்பு எனக்கு உள்ளது. அதனாலேயே அனைத்து மக்களும் சமாதானமாக ஒரே நாட்டில் வாழ வேண்டும் என்பதற்காக இந்தப் பயணத்தை ஆரம்பித்துள்ளேன் எனத் தெரிவித்தார். (ஐ-6)

# உரிமைகளுக்கு குரல்கொடுக்க கூட்டமைப்பு எப்போதும் தயார்

## சாணக்கியன் எம்.பி.தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஓக.31

**எமது மக்களின் உரிமைக்கான பிரச்சினைகள் வந்தால் நாங்கள் தான் எப்போதும் வருவோம். அன்றும், இன்றும், என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்காகக் குரல் கொடுக்கும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, வட கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கவனயீர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று மக்களின் போராட்டத்துக்காகக் குரல்கொடுக்க வந்தவர்கள் யார் என்பதை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

நாங்கள் இன்று களத்தில் நிற்கின்றோம். தேர்தல் காலத்தில் மக்கள் மக்கள் என்று கதைத்தீர்களே, நீங்கள் எல்லாம் எங்கே?. தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வாலிபர் முன்னணி என அனைவரும் நிற்கின்றோம்.

இது மக்களின் போராட்டம். மக்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே? கடத்தியவர்கள் இந்த மாவட்டத்திலும் உள்ளனர். கடத்திய நீங்கள் இன்று பெரும் பதவிகளில் இருக்கலாம். ஆனால் எங்களுக்குத் தேவை பதில். எமது உறவுகள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? உயிருடன் இருந்தால் எங்கே? உயிருடன் இல்லாவிட்டால் அவர்களுக்கு என்ன நடந்தது?

இது தொடர்பில் சர்வதேச சமூகம் கவனிக்க வேண்டும். கடந்த காலங்களில் காணாமல் போதல் தொடர்பான விடயங்கள் அரசியல் அடக்கு முறையாகக் கூட பயன்படுத்தப்பட்ட விடயம் என்றும், தொடர்ச்சியாக மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகின்றார்கள் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையே குறிப்பிட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தைத் தடுப்பதற்கு கொரோனாவைப் பயன்படுத்தினர். எமது உறவுகளைத் தேடும் போராட்டத்தை விடுதலைப் புலிகளை மீளுருவாக்கும் முயற்சி என்றும், தீவிரவாதத்தைத் தூண்டும் செயற்பாடு என்றும் சொல்லித் தடுக்கப் பார்த்தார்கள். இவ்வாறு நிறையப் பிரச்சினைகள் உள்ளன. எது எவ்வாறு இருப்பினும், மக்களுக்கான போராட்டங்கள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும், என்றார். (க-150)

# கருத்துப் பகிர்வு

யாழ்ப்பாணம், ஓக.31

மூத்த பொதுவுடமைவாதி சி.கா. செந்தில்வேலின் "மக்கள் அரசியலில் 55 வருடங்கள் பாதையும் பயணமும்" என்ற தலைப்பில் கருத்துப் பகிர்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவை பணிமனையில் நடைபெறவுள்ளது

நிகழ்வில் "இன்றைய உலகச் சூழலில் சோசலிசமும் நாடாளுமன்ற அரசியலும்" என்ற தலைப்பில் பேராசிரியர் சி.சிவசேகரத்தின் கட்டுரையும், "ஏகாதிபத்தியமும் தேசியமும் புரிதலுக்கான சில குறிப்புகள்" என்ற தலைப்பில் தெ.ஞா.மீனிலங்கோவின் கட்டுரையும், "சமகால அரசியலில் சமூக ஊடகங்கள்" என்ற தலைப்பில் மு.மயூரனின் கட்டுரையும் முன்வைக்கப்படவுள்ளன.

தொடர்ந்து இக் கட்டுரைகள் தொடர்பான கருத்துப் பகிர்வும் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



# காலிமுகத்திடலில் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.31

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும் எனக் கோரி, ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பு காலிமுகத்திடலில் எதிர்வரும் செப்ரெம்பர் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ரீதியில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, கடந்த அரசு, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கியது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமக்கும் வேலைவாய்ப்பை வழங்குமாறு வலியுறுத்தி, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். (க-இ)

# கலந்துரையாடல்

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டு இயங்கிவரும் பொது அமைப்புகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை கண்டறியும் சிறப்புக் கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மடுபிரதேசசெயலக கேட்போர்கூடத்தில் முன்னாள் பிரதியமைச்சரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமாகிய காதர் மஸ்தான் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. (ஐ-222)



# கௌரவிப்பு நிகழ்வு

மட்டக்களப்பு, ஓக.31

கிழக்கு மாகாண தபால் திணைக்களத்தால் தபால் சேவைகள் மற்றும் வெகுஜன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பிரதம தபாலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சரை கௌரவிக்கும் முகமாக அஞ்சல் திணைக்களத்தின் தொழிற்சங்களின் பிரதிநிதிகளால் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. (ஐ-150)









# இன்றைய நாள்

**மேடம்:** தடைகளைத் தாண்டி முன்னேறும் நாள். வேலைச்சுமை அதிகரிக்கும். மனச்சோர்வு நீங்கும். பிறரிடம் கடன் வாங்க வேண்டி வரும். எவரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது.

**இடபம்:** கவனமாக இருக்க வேண்டிய நாள். உங்களை அறியாமலேயே பிரச்சினை வலைகளில் விழ வாய்ப்புள்ளது. சிலருக்கு எதிர்பாராத நன்மைகள் உண்டு. பேச்சில் கவனமாக இருங்கள்.

**மிதுனம்:** யோசித்து செயல்பட வேண்டிய நாள். கவலைகள் சில இருக்கலாம். பணியாளர்களுக்குக் குழப்பம் கூடும். பணம் வருவதில் தாமதம் ஏற்படும். சிலருக்குத் தேவைகள் நிறைவேறும்.

**கடகம்:** உடல்நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள். செல்வந்தர்களின் நட்பால் சிறு நன்மைகள் உண்டு. பதவி உயர்வுக்கு இன்னும் காத்திருக்க வேண்டும். கலைஞர்களுக்குப் புதுஒப்பந்தம் கைக்கு வரும்.

**சிம்மம்:** எதிர்பாராத விஷயங்கள் நடக்கும் நாள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உடன்பிறந்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர். எதையும் யோசித்துச் செய்வீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு இருக்கும்.

**கன்னி:** கடினமாக உழைக்க வேண்டிய நாள். பணியாளர்கள் வெற்றி பெறுவார்கள். செலவுகள் ஏற்படும். வருமானம் திருப்தி தரும் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள்.

**துலாம்:** கவலைகள் தீரும் நாள். சக ஊழியர்களிடம் சுமுகமாகப் பழகுவீர்கள். குழந்தைகளால் நிம்மதி உண்டாகும். உழைப்பு வீண்போகாது. பொறுப்புடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** முன்னேறும் நாள். வியாபாரிகளுக்கு வருமானம் பெருகும். குடும்பத்தை பற்றிய கவலைகள் தீரும். ஆரோக்கியத்தில் அலட்சியம் வேண்டாம்.

**தனுசு:** மனம் நிறையும் நாள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். இயந்திங்களை கவனமாக இயக்குங்குள். பிள்ளைகள் பற்றி இருந்து வந்த துயர்கள் நீங்கும்.

**மகரம்:** தவறுகளை திருத்திக் கொள்ளும் நாள். முக்கிய பணிகளை பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம். குடும்பத்தாரின் அன்பு அதிகரிக்கும். உங்களின் அந்தஸ்து உயரும்.


**கும்பம்:** பெருமையுடன் நிமிரும் நாள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். பொதுச் சேவை செய்யும் எண்ணம் மேலோங்கும். மூத்தோர் பாராட்டுவார்கள்.

**மீனம்:** முயற்சிகள் வெல்லும் நாள். கடந்த கால செயல்களை நினைத்து மகிழ்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பற்றிக்கவலைஏற்படும். வெறுத்தவர்கள் நெருங்கி வருவார்கள்.











வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ஐ)

## போதைக் கடத்தல்: இருவர் கைது

கொழும்பு, ஓக. 31.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் ஹன்வெல்ல பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து சுமார் ஒரு மில்லியன் ரூபா மதிப்புள்ள போதைப் பொருட்கள், ஒரு கார், போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகவல்கள் அடங்கிய புத்தகம் மற்றும் பல ஏ.ரி.எம் கார்டுகள் என்பவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்களில் ஒருவர் பாடசாலை மாணவர் எனவும், மற்றையவர் மாலபேயில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழகத்தின் மாணவர் எனவும் தெரிவித்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (ந-இ)

## மஞ்சள் கடத்தல்: அறுவர் கைது

கொழும்பு, ஓக. 31

சட்டவிரோதமான முறையில் மஞ்சளை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த 6 சந்தேகநபர்கள் புத்தளம் கல்பிட்டி கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது, அந்த நபர்களிடம் இருந்து 1428 கிலோகிராம் மஞ்சள் கைப்பற்றப் பட்டுள்ளது.

அத்துடன், டிங்கிப் படகொன்றும் இதன்போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது . (வ-இ)





மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் வரணி ரட்ணா முன்பள்ளிக்கு, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஞா.திலகராணியால் அலுமாரி ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டது. (ந-159)

## போதைக்கு அடிமையானவர்கள் ஐந்து லட்சத்தைத் தாண்டினர்!

கொழும்பு, ஓக. 31

நாட்டில் போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்தைக் கடந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட அனைத்துக் குற்றச் செயல்களையும், கட்டுப்படுத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து கொழும்பில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் குறித்த ஐந்து லட்சம்



பேரில் 25 ஆயிரத்திற்கும் அதிக மானவர்கள் மேல் மாகா ணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, போதைப்பொருளுக்கான பணம் கையடக்க தொலைபேசிகள் ஊடாகவே பரிமாற்றிக் கொள்ளப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# சீரமைக்கப்பட்ட வீதி: 3 மாதங்களில் சேதம்

*மீள்சீரமைப்புக்கு முன்னர் அங்குள்ளோர் விவரம் கோருகின்றனர்*

யாழ்ப்பாணம், ஓக. 31
உரிய தொழில்நுட்ப பிரயோகமின்றி இடம்பெறும் நவாலி வடக்கு, பிப்பிலி விதி மீள்புனரமைப்பை உடன் நிறுத்த வேண்டும் என நவாலி வடக்கு மற்றும் கட்டுடை வளர்மதி சனசமூகத்தினர் கோரியுள்ளனர். அந்த வீதி மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்ட போதும் மூன்று மாதங்களில் மீளவும் வீதி சேதமடைந்துள்ளது. கற்கள் வெளிக்கிளம்பியுள்ளன. அந்த வீதி சீரமைப்பில் முறைகேடு நடந்திருக்கலாம் என்று கிராம மக்கள் கருதுகின்றனர். அதனால் அந்த வீதியைச் சீரமைக்க ஒதுக்கப்பட்ட நிதித் தொகை மூலம், நிதி, சீரமைப்பு விவரம் உள்ளிட்ட தகவல்களைப் பகிரங்கப்படுத்துமாறு அவர்கள் கோரியுள்ளனர். (த-50)

# நாவற்குழியில் அரச வீடுகள் பெற்று வாடகைக்கு விடும் சிங்கள மக்கள்

## பிரதேச சபையில் சுட்டிக்காட்டு

கொடிகாமம், ஓக. 31

**நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டிக்கொடுத்த வீடுகள் சில அனுமதியற்ற விடுதிகளாக பயன்படுத்தப்படுகின்றன. இதனால் சுகாதார, சமுதாய, சீர்கேடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும் பிரதேச சபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாவகச்சேரி பிரதேச சபை அமர்வில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அங்கு 53 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றது. அதில் 21 வீடுகளில் மட்டும் உரிமையாளர்கள் வசிக்கின்றனர். மிகுதி குடும்பங்கள் வீடுகளை வாடகைக்கு வழங்கிவிட்டு தென்பகுதிக்குச் சென்றுவிட்டன. அவ்வாறு வெளியேறியவர்களின் வீடுகள் பிரதேச சபையின் அனுமதி பெறாமல் விடுதிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. தென்பகுதியிலிருந்து பேருந்துகளில் வருவோர் அந்த விடுதிகளில் தங்கச் செல்கின்றனர். கொரோனா காலத்தில் எதுவித பரிசோதனைகளும் இன்றி வந்து அந்தப்பகுதியில் தங்குகின்றனர். தவிர, சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுகின்றன. போதைப்பொருள் விற்பனையும் இடம் பெறுகிறது. வீடுகளற்ற சிங்கள மக்களுக்கு வீடுகட்டி கொடுக்க அவர்களில் சிலர் வீடுகளை விற்றுவிட்டு செல்கின்றனனர். சிலர் வாடகைக்கு இருத்திவிட்டு செல்கின்ற இரண்டு வீடுகளை ஒன்றாகச் சேர்த்து விடுதியாக பாவிக்கின்றனர் என்று சுட்டிக்காட்டினார். இது தொடர்பாக தவிசாளர் க.வாமதேவன் நேரில் சென்று விசாரித்த போது, தென் பகுதியில் இருந்து வருவோர் (இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தினரது உறவினர்கள்) அங்கு வந்து தங்குகின்றனர் என்று தெரிவித்துள்ளனர். எனினும், சுகாதார பிரிவினரிடம் பதிவுசெய்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சாவகச்சேரி பிரதேச சபையிலும் உரிய அனுமதிகளைப் பெற வேண்டும் என்று தவிசாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

# போராளிகள் பட்டினி கிடக்க சபையில் மொழி விவாதம்

*சாடுகின்றார் ஆனந்தசங்கரி*



யாழ்ப்பாணம், ஓக. 31
முன்னாள் போராளிகள் பசி பட்டினியுடன் போராடிக் கொண்டிருக்கும்போது, உலகின் மூத்த மொழி எது? என்று இப்போது நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்து கொண்டிருக்கின்றது.
இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார். அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
உலகிலேயே முதல்தோன்றிய மொழியும் மூத்தகுடியும் தமிழும், தமிழர்களும் தான் என்பது உலகிலுள்ள அனைத்து இன மொழி மக்களுக்கும் தெரிந்த ஒரு விடயம். தகவல் தொழில்நுட்பம் மிக வளர்ச்சிபெற்ற இந்தக் காலத்தில் ஐந்து வயது சிறுவர்களுக்குக் கூட இந்த உண்மை தெரியும்.
நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா நாடாளுமன்றில், "தேசியம், சுயநிர்ணயம் பேசி தமிழ் இளைஞர்களை தவறாக வழிநடத்திய அமிர்தலிங்கம், பிரபாகரனுக்கு நேர்ந்தது என்ன என்பது அனைவருக்கும் தெரியும்" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.
அவரின் கூற்றுப்படி அமரர் அமிர்தலிங்கத்தின் கொலையும் அன்றைய அரசினுடைய முழு ஒத்துழைப்போடு தான் நடந்தேறியதென்பதை மறைமுகமாக ஒத்துக்கொண்டுள்ளார் என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

# ஒரே பெயரில் இரு உறுப்பினர்கள்

## நாடாளுமன்றில் குழப்பம்

கொழும்பு, ஓக. 31
ஒரே பெயரில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதனால் நாடாளுமன்றத்தில் பிரச்சினைகள் எழுந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நீதி அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரியை நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் நியமிப்பது தொடர்பான கடிதம் அலி சப்ரியிடம் ஒப்படைக்கப்படவிருந்தது.
எனினும், அந்த கடிதம் நாடாளுமன்ற அதிகாரிகளிடையே ஏற்பட்ட குழப்பம் காரணமாக புத்தளம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது பின்னர் தெரியவந்தது. இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கர் சபாநாயகரிடம் விசாரித்த போது, ஒரே மாதிரியான இரண்டு பெயர்கள் இருக்கின்றமையால் தான் அந்தக் குழப்பம் ஏற்பட்டது என்று கூறியுள்ளார்.
இதற்கிடையில், நியமிக்கப்பட்ட புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், தாம் அந்தப் பகுதியில் தனது மக்களுக்கு சேவைசெய்ய வேண்டியிருப்பதால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து இராஜினாமா செய்ய நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# கிழக்கு தமிழரின் பலம் நாங்கள் மட்டும்தான்

*கூறுகின்றார் வியாழேந்திரன்*

மட்டக்களப்பு, ஓக. 31
நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் கிழக்கு தமிழர்களுக்கான ஒரேயொரு பலமான குரல் நாங்கள் மாத்திரமே என்பது தமது மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார். மட்டக்களப்பு துறைநீலாவணையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
உரிமையோடு கூடிய அபிவிருத்தி சார்ந்த அரசியலை நாங்கள் இந்த மாகாணத்தில் கட்டியெழுப்பவேண்டும். இந்த மாவட்டத்தில் 58.9 வீதமாகவிருந்த நாங்கள் தற்போது 38.6 வீதமாக இருக்கின்றோம்.
எமது இன, வள, பொருளாதாரம் போன்ற பல்வேறுபட்ட துறை சார்ந்த வளர்ச்சி அசமந்த போக்கில்தான் தமிழர்களைப் பொறுத்தவரையில் சென்றுகொண்டிருக்கின்றது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும். இதனடிப்படையில் ஆரோக்கியமான ஓர் அரசியலை இந்த மாகாணத்தில் கட்டியெழுப்ப வேண்டும். என்றார். (த-150)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஒரு தொன் கடலட்டைகள் மீட்பு

கொழும்பு, ஓக. 31
ஒரு தொன் நிறையுடைய கடல் அட்டைகளை சட்டவிரோதமாக இலங்கைக்கு கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் மூவரை இந்திய கடலோர பொலிஸார் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.
அத்துடன் கடத்தல் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட படகையும் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகள் சுமார் 6 லட்சத்து 83 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியுடையவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும், பறிமுதல் செய்யப்பட்ட கடலட்டைகள் மற்றும் படகு என்பனவும் மேலதிக விசாரணைகளுக்காக தூத்துக்குடிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)



இலங்கை செஞ்சிலுவை சங்க கிளிநொச்சி கிளையினால் 1000 மரக் கன்றுகள் நடும் செயற்றிட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் மர நடுகை ஆரம்பிக்கப்பட்டது. (ந-222)

# விக்கி அடங்காவிடின் தமிழருக்கும் ஆபத்து

## சஜித் அணி எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 31

**சிங்கள மக்களின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் விக்னேஸ்வ ரன் தொடர்ந்து கருத்து வெளியிட்டால் பாரிய விளைவுகளை அவர் சந்திக்க வேண்டிவரும். அதனால் தமிழ் மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனைத் திருத்தவே முடியாது. அவரது கருத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் நியாயப்படுத்துகின்றார். விக்னேஸ்வரனுக்கு ஒத்து ஊதுபவராக சபாநாயகர் இருக்கும்போது அவரை (விக்னேஸ்வரனை) நாம் எப்படித் திருத்த முடியும்?' விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரையில் சர்ச்சைக்குரிய பகுதிகளை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குமாறு சபாநாயகரிடம் சபையில் வைத்து நாம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

ஆனால், சபாநாயகர் அது விக்னேஸ்வரனின் கருத்துச் சுதந்திரம் என்றும், உரையை நீக்க முடியாது எனவும் கூறியுள்ளார். இந்தத் துணிவில் விக்னேஸ்வரன் தனது உரையை நியாயப்படுத்தும் வகையில் மீண்டும் சபையில் எமக்குச் சவால் விட்டுப் பேசியுள்ளார். அவரைத் திருத்தவே முடியாது.

முன்னாள் முதலமைச்சர் ஒருவருக்கு சபையில் எந்த விடயத்தைப் பேசுவது என்று தெரியாமல் இருக்கின்றது. இவரையெல்லாம் முதலமைச்சராகத் தெரிவு செய்து பின்னர் அவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த வடக்கு மக்கள் அதற்காக வெட்கித் தலைகுனிய வேண்டும். இலங்கையில் மீண்டும் இனக்கலவரத்தைத் தூண்டும் வகையில் விக்னேஸ்வரன் சபையில் உரையாற்றி வருகின்றார்.

வடக்கில் போர் இடம்பெற்று தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த காலத்தில் கொழும்பில் பாதுகாப்பாகத் தூங்கி எழுந்தவர்தான் இந்த விக்னேஸ்வரன். இவருக்குப் போரின் வலி தெரியாது. இப்படிப்பட்டவரை வடக்கு மக்கள் ஏன் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தார்கள் என்று எமக்குத் தெரியாமல் இருக்கின்றது.

சிங்கள மக்களின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் விக்னேஸ்வரன் தொடர்ந்து கருத்து வெளியிட்டால் பாரிய விளைவுகளை அவர் சந்திக்க வேண்டி வரும். அதனால் தமிழ் மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும்'- என்றார். (ம-22)



பெற்றோரை இழந்த நிலையில் 18 வருடங்களுக்கு மேலாக வவுனியா வேப்பங் குளம் இந்து அன்பகத்தில் வாழ்ந்து வந்த இரு பெண்களுக்கு அன்பகத்தின் பொறுப்பாளர் சாமிஅம்மா தலைமையில் இன்று காலை திருமணம் இடம்பெற்றது. இவர்களுக்கான திருமண நிகழ்வு வேப்பங்குளம் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமிகள் இந்து அன்பக மண்டபத்தில் நடைபெற்றது. ஒருவருக்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவும் அவரது துணைவியாரும் தாய் தந்தையராக வும், மற்றையவருக்கு வவுனியா நகரசபைச் செயலாளர் இராசையா தயாபரனும் அவரது துணைவியாரும் தாய் தந்தைாராகவும் பொறுப்பேற்று கன்னிகாதானம் செய்து திருமணத்தை நடத்திவைத்தனர். (ற-110)

# பேருந்து ஊழியர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஓக.31

மேல் மாகாணத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டு எரிபொருள் நிரப்புவதற்காகச் செல்லும் பேருந்து ஊழியர்களுக்கு தண்டனை வழங்கப்படவுள்ளதுடன் அப்பேருந்துகளுக்கான அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதிகார சபையின் தலைவர் பிரசன்ன சன்ஜீவ தெரிவிக்கையில், எரிபொருள் நிரப்புவதற்கு பயணிகளுடன் பேருந்தைக் கொண்டு செல்வது மிகவும் ஆபத்தானது என்பதுடன் பாதுகாப்பும் அற்றது.

பேருந்துகளுக்கு அவசியமான எரிபொருள்களை முன்கூட்டியே பெற்றுக்கொள்வது ஊழியர்களின் பொறுப்பாகும். பேருந்துகளுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக பயணிகளுடன் எரிபொருள் நிலையத்திற்கு செல்வதென்பது ஆபத்தான குற்றமாகும். அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

# தனிமைப்படுத்தலில் தப்பித்தவர் கேகாலையில் கைது

கொழும்பு, ஓக.31

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்ற 80 வயதான வயோதிபப் பெண்ணொருவர் கேகாலை பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதால் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தலையீட்டில் முல்லேரியா தேசிய மனநல நிறுவகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்த வயோதிபப் பெண்ணுடன் தொடர்பைப் பேணியிருந்த கேகாலை விற்பனை நிலையம் ஒன்றின் 7 பணியாளர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# கண்டியில் நிலஅதிர்வு

கொழும்பு, ஓக. 31

நேற்றுமுன்தினம் இரவு வேளையில் கண்டி மாவட்டத்தின் சில பிரதேசங்களில் சிறிய அளவில் நில அதிர்வு உணரப்பட்டது என்று புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் ஹார கம, திகண, மைலாப்பிட்டிய ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. இது குறித்த அப்பகுதி மக்கள் அச்சமடையத் தேவையில்லை என அந்தப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-இ)

# கண்டியில் ஏற்பட்டது இயற்கை நிலநடுக்கமல்ல!

## *விசாரணைகள் ஆரம்பமாகின*

கொழும்பு, ஓக. 31

இலங்கையில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட நில அதிர்வு இயற்கையான செயற்பாடு 'அல்லவென தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்திலுள்ள ஹாரகம, மைலபிட்டிய, திகன பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது என புவியியல் ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. எனினும் இந்தச் சம்பவம் இயற்கையான நில அதிர்வு 'அல்ல என ஆய்வு நிறுவனத்தின் சுனாமி எச்சரிக்கை பிரிவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கண்டி, பல்லேகல பிரதேசத்தில் அமைந்துள்ள நில அதிர்வு அளவீட்டில் மட்டுமே சில சமிக்ஞைகள் பதிவாகியுள்ளன எனவும் இது இயற்கையான சம்பவம் அல்ல என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சிறப்புக் குழுவொன்று விசாரணை நடத்தி வருகின்றது. (ம-இ)

# வெளிநாடுகளிலிருந்து 609 பேர் தாயகத்துக்கு

கொழும்பு,ஓக.31

வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்புகளுக்காகச் சென்ற 609 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பினர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து, எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தில் 8 இலங்கையர்களும், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தில் 272 இலங்கையர்களும் கட்டுநாயக்க 'விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

'கட்டாரின் டோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமனத்தில் 42 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர். அத்துடன் மாலைதீவில் தங்கியிருந்த 287 இலங்கையர்கள், விசேட விமானம் மூலம் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அனைவரும் பி.சி.ஆர்.சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பரிசோதனை முடிவுகள் வெளிவரும் வரையில், விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் இவர்களைத் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, அவர்களைத் தனிமைப் படுத்தல் முகாம்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (க-இ)

கு.குகதாசன்
ஆசிரியர்,
யா.அராலி இந்துக் கல்லூரி

# வரைதலை நிறுத்தியது எழுத்துத் தூரிகை

எழுத்து இயற்பண்புவாத ஓவியச் செல்நெறிகளில் தனித்துவம் மிக்கவராக, இணையற்ற கலைத்துவ ஆளுமையைக் கொண்ட கலைஞராக தன்னை அடையாளப்படுத்தி நிற்பவர் ஓவியர் ஆசை இராசையா. யாழ் மண்ணில் வளமிக்க அச்சுவேலியில் 1946இல் பிறந்தார். இவரது தந்தை ஆசை அமைதியும், தர்ம சிந்தனையும் நேர்மை வழிப்போக்கும் கொண்டவர். தாயார் செல்லம்மாவும் தந்தை வழிவாழும் பொறுப்புணர்வு மிக்க குடும்பப் பெண் - தையற் கலையில்த் தேர்ந்தவர். இராசையாவின் ஓவியத்திறன் இயல்பிலேயே இளவயதிலேயே வேரூன்றி வளரத் தொடங்கியது. விடா முயற்சியும், இடையறா உழைப்பும் கொண்ட எவனும் பொருளாதார இலக்குடன் கூடிய போராட்ட வாழ்வை எதிர்கொண்டு வாழும் அச்சுவேலி கிராமத்து மக்களின் வாழ்வோடு கலைத்தாகம் கொண்ட இராசையாவின் நெருக்கமான ஒட்டுதல் சாத்தியமற்றுபோனதில் வியப்பில்லை. 'கலை' பொருளாதார ஏற்றத்திற்கு உதவாது என்பதே கிராமத்துச் சித்தாந்தம்.




ஆசை இராசையா

பாடசாலை வாழ்வு முடிந்ததும் அவரது கலை வேகமாக கொழும்பு நுண்கலைக் கல்லூரியை நோக்கித் தள்ளியது. அது அவரது வாழ்க்கையில் திருப்பு முனையை ஏற்படுத்திய தேடல் காலமாகியது. அவருள்ளிருந்த ஓவியக் கலைஞன் புதிய பரிணாமத்தை நோக்கிய வளர்ச்சியில் தன்னை இனங்காட்டத் தொடங்கிய காலம் அதுதான்.

தேடல், ஆய்தல், கற்றல், அறிதல் என விரிந்து பரந்ததில் அவர் 'ஆத்மா'வின் கலையார்வம் விஸ்வரூபம் கொள்ளத்தொடங்கியது. அந்த விஸ்வரூப வளர்ச்சி பிரமிக்கவைக்கும் வகையில் வளர்ந்து இவரை ஒரு மகா கலைஞனாக்கியுள்ளது. பல கண்காட்சிகளில் இவரது ஓவியங்கள் அவரது தனித்துவக் கலை ஆளுமையை அடையாளப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

பரிசுகள், விருதுகள், பாராட்டுக்கள், கௌரவங்கள் என அவருக்கு கிடைத்த தேசிய அங்கீகாரங்கள் பல. அனைத்தையும் மௌனமாக ஏற்றுக்கொண்டு அமைதியாக தன்னியல்பு மாறாத கலைஞனாக, தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளமை வியப்பிற்குரிய ஒன்று.



ஓவியர் வரைந்த முத்திரைகள்

**படைப்புக்களால் பேசியவர்**

குடத்துள் விளக்காக அவர் தன்னை சுயவிளம்பரங்களைப் புறந்தள்ளி ஒடுக்கிக்கொள்பவராக இருந்தாலும் அவரது கலைப் படைப்புகளின் 'பிரமாண்டம்' அவரை குன்றின் மேல் விளக்காக சுடர்விட வைத்துள்ளமை அவரது கலை ஆளுமைக்குக் கிடைத்த வெற்றி.

இலங்கையின் மிகப்பிரபல ஓவியர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படுபவர். பிறப்பு முதல் 1965ஆம் ஆண்டுவரை அச்சுவேலியில் வாழ்ந்தவர். அச்சுவேலி மத்திய கல்லூரியின் பழைய மாணவர். ஓவியத்தின்பால் கொண்டிருந்த ஆர்வத்தினால் பாடசாலைக் காலத்தில் ஓவிய பாடத்திற்கே அதிக மதிப்பெண்களைப் பெற்றதாகக் கூறும் இவர் பாடசாலைக் காலத்தில் தனக்குச் சித்திர பாடத்துறையில் போதிய வழிகாட்டல் கிடைக்கவில்லை என தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார். ஓவிய பாடத்தில் மேற்படிப்பைத் தொடர்வதென்பதில் சமூகம் அக்கறை காட்டாத காலகட்டத்தில் வீட்டாருடைய எதிர்ப்பையும் மீறி கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் அனுமதி பெற்று 1966ஆம் ஆண்டு தொடக்கம் 1969ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் ஓவிய நுட்பங்களைப் பயின்றார்.

ஸ்கெச் பண்ணுதல், பிரதிமை பண்ணுதல் என எதிலும் தேர்ந்தவராக விளங்கினார். தைல வர்ணம், நீர் வர்ணம், பஸ்டல் என ஓவியக் கலைக்குரிய எவ்வூடகத்தையும் நேர்த்தியாகக் கையாளும் ஆளுமை இவரிடம் இருந்தது. நிலக்காட்சி ஓவியங்களை வரைவதில் தனித்துவம் பெற்று விளங்கினார். அச்சுவேலி பிரதேசத்தின் இயற்கை அழகு, வல்லைப் பிரதேச நீரோடைக் காட்சிகள், பனைகளும் தாளம் பற்றைகளும் நிரம்பிய காட்சிகள் என இளமையில் தான் தரிசித்த ஊரின் அழகை நிலக்காட்சி ஓவியங்களாக வரைந்து பெருமை பெற்றுள்ளார். இந்த ஓவியங்கள் பல இலட்சம் ரூபாக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தம்.

இவர் வரைந்த பிரதிமை ஓவியங்களும் பிரபலமானவை. யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் மகேஸ்வரன் ஆகியோரின் மெய்யுருக்களும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உள்ள பசுபதிச் செட்டியார், நாகலிங்கச் செட்டியார் மற்றும் இந்துவின் அதிபர்களது மெய்யுருக்களும் இவரது கைவண்ணத்தில் உருவானவை என்பது குறிப்பிடத்தக்கது.

1971இல் வேலணை மத்திய கல்லூரியில் சித்திரபாட ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் பலாலி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று 1975 தொடக்கம் 1983 வரை கொழும்பு றோயல் கல்லூரியில் பணியாற்றினார். இனக்கலவரத்தின் பாதிப்புக்கள் இவரையும் விட்டுவைக்கவில்லை. இதனால் தமிழ் மண்ணிலேயே வாழ்வது என்ற முடிவுடன் உறுதி பூண்டு வாழ்ந்து வந்தார்.

**முத்திரைகளுக்காக வரைந்தவர்**

இலங்கை முத்திரைப் பணியக ஓவியக் குழுவில் ஓவியர் இராசையா இடம்பெற்றமை அச்சுவேலிக்குப் பெருமை தரக்கூடிய அம்சமாகும். இலங்கை அரசின் எட்டு முத்திரைகளுக்கான ஓவியங்களை இவர் வரைந்துள்ளார். சேர். பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, சேர்.ஜோன் கொத்தலாவல, ஜோர்ஜ் ஈ.டி.சில்வா, ஈ.பி.மல்லசேகரா ஆகியோரது மெய்யுருக்களும் 'தவலம்' என்ற மலையகப் போக்குவரத்து மார்க்கம், இலங்கையின் முதற் புகைவண்டி ஓவியம் என்பனவே அவையாகும்.

ஓவியர் ஆசை இராசையாவின் படைப்புக்களில் வெளிக்காட்டப்படும் உருவங்கள் யாழ். மண் சார்ந்ததாகவே இருக்கின்றன. இவர்து முதலாவது தனிநபர் ஓவியக் கண்காட்சி 1985இல் அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. ஓவியத்துறை சார்ந்து பல பட்டங்களையும் விருதுகளையும் ஆசை இராசையா பெற்றுள்ளார். இவற்றில் நல்லூர் பிரதேச செயலகம் வழங்கிய கலைஞானச் சுடர் (2009), வடமாகாண ஆளுநர் விருது (2009), கலாபூஷணம் விருது (2010), கொழும்புத் தமிழ்ச் சங்க விருது (2012), ஞானம் சஞ்சிகை விருது (2012), எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 'தமிழியல் விருது' (2013), திருமறைக் கலாமன்றம் வழங்கிய கலைஞான பூரணன் விருது (2014) என்பவை குறிப்பிடத்தக்கனவாகும்.

யாழ். பல்கலைக்கழகச் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் கற்கும் மாணவர்களுக்கு வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றினார். ஆசை என ஆன்றோரால் ஆசையாக அழைக்கப்பட்ட இக்கலைஞர் தரமான நூல்களின் வடிவமைப்பாளராகவும் அட்டைப்பட ஓவியராகவும் நிலவுருக்கள் மற்றும் மெய்யுருக்களை வரைவதில் புகழ் பெற்றவராகவும் தனது கலைச்சேவையைத் தொடர்ந்தவர். ஆசை. இராசையா அண்மையில் தனது ஓவியங்கள் பற்றியதான 'விம்பம்' நூலையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆசை. இராசையா சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் மாலை இறைபதமடைந்தார். வர்ணங்களுள்ளவரையும் தூரிகைகள் இயங்கும் வரையும் இவ் அற்புதக் கலைஞனின் பெயரை அவை மானசீகமாக உணர்த்தியவண்ணமே இருக்கும்.





ஓவியர் வரைந்த ஓவியங்கள்

# இலங்கை அரசுக்கு உதவ சீனா எப்போதும் தயார்

## உறுதியளித்தார் பதில் சீனத் தூதுவர்



கொழும்பு, ஓக. 31

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தல், சுகாதாரத்துறையை மேம்படுத்தல் உள்ளிட்ட புதிய அரசாங்கத்தின் ஏனைய வேலைத்திட்டங்களுக்கு உதவ சீனா தயாராகவுள்ளது என்று இலங்கைக்கான பதில் சீனத்தூதுவர் ஹூ வெய் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் இலங்கைக்கான பதில் சீனத் தூதுவர் ஹூ வெய் ஆகியோருக்கிடையிலான விஷேட சந்திப்பு அண்மையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவுவதைக் கட்டுப்படுத்தல் மற்றும் அதனை ஒழித்தல் என்பவற்றுக்காக அரசாங்கத்தின் வேலைத்திட்டம் மற்றும் செயற்பாடுகளைப் பலப்படுத்தல், இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளைமேம்படுத்தல்என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கொவிட்19 பரவல் காரணமாக சீனா பெரும்நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த போது இலங்கை வழங்கிய உதவிகளுக்கு சீன ஜனாதிபதி மற்றும் அந்நாட்டு மக்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதாக பதில் தூதுவர் அமைச்சரிடம் தெரிவித்தார். அத்தோடு கொரோனா கட்டுப்படுத்தல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் சீனா அவதானம் செலுத்தியுள்ளதாகவும் தூதுவர் தெரிவித்தார். இலங்கையில் வாழ்கின்ற சீன மக்கள் வைரஸ் கட்டுப்படுத்தலுக்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துச் செயற்றிட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கியதோடு தனிமைப்படுத்தல் உள்ளிட்டவற்றுக்கும் ஒத்துழைத்தமையை தாம் மதிப்பதாக அமைச்சர் பவித்திரா தூதுவரிடம் எடுத்துரைத்தார். (பஇ)



# வவு.முன்பள்ளிகளில் தொற்று நீக்கி விசிறல்

வவுனியா, ஓக. 31

கொரொனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் தொற்றுநீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கபட்டு வருகின்றன.

வைரஸ் தாக்கம் காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் அண்மையில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. முன்பள்ளிகளுக்கான கல்விச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதனை முன்னிட்டு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட 50 க்கும் மேற்பட்ட முன்பள்ளிகளுக்கு தொற்று நீக்கும் செயற்பாடு தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராயசிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் பிரதேச சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ப-110)




உரும்பிராய்
கருணாகரப் பிள்ளையார்
கோயில்
தேர்த்திருவிழா

விஞ்ஞாபனம் - 01.09.2020

உமையவள்தன் பாலகனார் தேரிலேறி
உரும்பைநகர் வீதிவாரார் பாரும்பாரும்
பரத்தைப்புலக் கருணாகரன் தேரிலேறி
சிக்கலெல்லாம் சீக்கிரமாய் தீரச் செய்து
செல்வமொடு செல்வாக்கு மருளுவாய்
கலையான்மிளிர் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே

சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலின்
இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில்
நாளை (01.09.2020) செவ்வாய்க்கிழமை எல்லாம் வல்ல

கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா

வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது

நாளை காலை 08.00 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து எம் பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். நாளைய தேர் உற்வசத்தில் ஈழத்துப் புகழ் பூத்த பல தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் கலந்துகொண்டு எம் பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள் கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்தில் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி கலந்துகொண்டு எம்பெருமானின் திருவருட் கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

தேர்த்திருவிழா உபயகாரர்கள்.



(CS 27933) (14.17)

# மாணவர்கள் கௌரவிப்பு

2019ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில், தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவர்கள், மற்றும், கணித திறனாய்வுச் சாதனையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு செம்மணி வீதியில் உள்ள பரீட்சை அலகுப் பிரிவில் இடம்பெறும் (ப)

# துப்பாக்கி வெடித்ததில் குடும்பத்தலைவர் சாவு

## இரண்டரை வயது குழந்தை காயம்

பதுளை, ஓக. 31

சட்டவிரோதமாக உருவாக்கப்பட்ட கட்டுத் துவக்கு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன், உயிரிழந்தவரின் மகளான இரண்டரை வயதுக் குழந்தையும் படுகாயங்களுக்கு உள்ளாகியது.


இந்தச் சம்பவம் பசறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெமேரியா தோட்ட, மாத்தென்ன பிரிவுக்கு அண்மையில் அமைந்துள்ள ரிட்டிக்காதோவ கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த சுனில் சாந்த (வயது 29) என்ற குடும்பத்தலைவர் உயிரிழந்ததுடன், அவருடைய இரண்டரை வயது நிரம்பிய மகள் படுகாயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

வீட்டுக்கு வெளியே சத்தம் கேட்ட போது, சுனில் சாந்த தனது இரண்டரை வயது நிரம்பிய மகளை கையில் தூக்கிக்கொண்டு சமையலறைப் பகுதியில் இருந்த துப்பாக்கியை எடுத்து நிலத்தில் தட்டிக் கொண்டு வெளியில் செல்லும் போதே துப்பாக்கி வெடித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. படுகாயமடைந்த இருவரும் பசறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனினும் சுனில் சாந்த சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறைப் பொலிஸார் மேற்கொண்டனர். (பஇ)

# கண்ணீருடன்...

ஈழத்தின் புகழ்பூத்த மூத்த ஓவியரும்
எமது மன்றத்தின் ஓவியச் செயற்பாடுகளின் நீண்டகால வளவாளராகவும்,
ஓவியக்கூடத்தின் (Art Gallery) ஆலோசகராகவும் பணியாற்றியவருமான

## ஆசை இராசையா



அவர்கள் 29.08.2020 இல் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது நெஞ்சம் கனக்கும் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி, அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

இயக்குநர், அங்கத்தவர்கள்
**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# பொதுத் தேர்தலின் மூலம் இந்து ஆலய நிர்வாகம் தெரிவு

## நுவரெலியா கிராமம் ஒன்றில் முன்னுதாரணம்

நுவரெலியா, ஓக. 31

நாட்டின் தலைவர்களைத் தெரிவு செய்வதற்கு தேர்தல் ஒன்றை நடத்துவது போல், ஆலயம் ஒன்றின் நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்கும், தேர்தல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.


நுவரெலியா மாவட்டத்தின், மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பிரவுன்லோ ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினரைத் தெரிவு செய்யவே இந்தத் தேர்தல் இடம்பெற்றுள்ளது.

ஆலயங்களில் இடம்பெறும் ஊழல் முறையினை ஒழித்து சிறந்த ஜனநாயகப் பண்பு கொண்டமுறைமையொன்றினை ஏற்படுத்துவதற்காகவே ஆலய நிர்வாகத்தினர் குறித்த தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் கிராமத்தில் ஆலய நிர்வாகத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவர்கள்வேட்பாளர்களாகநிறுத்தப்பட்டனர். பொதுமக்கள் தாங்கள்விரும்பியவர்களுக்கு ஒன்றிணைந்து நேற்றையதினம் தமது வாக்கைப் பதிவு செய்தனர்.

இந்தத் தேர்தல் பிரவுன்லோ தோட்டத்தில் மிகவும் அமைதியாகவும் ஜனநாயக முறைப்படியும் இடம்பெற்றது முழு மலையகத்துக்கும் எடுத்துக்காட்டாக அமைந்தது. தேர்தலுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான ஒரு ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சிறந்ததொரு நிர்வாகக்குழு உருவாகும் என்பது அங்குள்ள அனைவரினதும் நம்பிக்கை என்று தெரிவிக்கப்பட்டது. (ப-இ)

# எட்டாம் ஆண்டு நினைவுநாள்

அமரர் **இளையதம்பி அருமைநாதன்** (அருமை)
திதி: வளர்பிறை சதுர்த்தசி



அன்னை மடியில் 06.10.1954
ஆண்டவன் அடியில் 29.08.2012

மண்ணுலகத்தில் இருந்து எம்மை விட்டு
– மறைந்த அப்பாவே!
எங்கள் மனதில் இருந்து உங்கள்
– நினைவுகள் என்றும் மறையாது அப்பா!
உங்கள் ஆத்ம சாந்திக்கு என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்.
தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**சோமு சின்னத்துரை**

தோற்றம் 04 . 04 . 1940
மறைவு 01 . 08 . 2020

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (31.08.2020) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் நயினாதீவு புனித கங்காதரணி தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் சுகயீனமுற்ற நேரத்தில் அனைத்து உதவிசெய்த நயினாதீவு அரச வைத்திய அதிகாரி, தாதியர் மற்றும் சகல ஊழியருக்கும் நன்றிதெரித்துகொள்வதோடு மேலும் எமது குடும்பத்தவலைவரின் மறைவுச் செய்திகேட்டு பல்வேறு வழிகளிலும் உதவியும், ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும், தொலைத்தொடர்புசாதனத்தின் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும். தொலைதூரங்களில் இருந்து அன்னாரைத் தேடிவந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். 31 ஆம் நாள் நினைவுதினமான இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1 ஆம் வட்டாரம்
நயினாதீவு.
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**மலர்தேவி அருணாசலம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்-
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)



மலர்வு 11.06.1953
உதிர்வு 03.08.2020

கடந்த (03.08.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி மலர்தேவி அருணாசலம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (31.08.2020) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடை பெறும்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 02.09.2020 புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"பூம்புகார்"
திருவீதி, உரும்பிராய் வடக்கு.
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



**முருகேசு ஜெயசங்கர்**

பூநகரி கமநல சேவைகள் நிலைய
ஓய்வு நிலை வெளிக்கள போதனாசிரியர்

அவர்கள் 30.08.2020 அன்று இறை பதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் ஆத்மா ஈடேற்றமடைய பிரார்த்திக்கும்.

**விநாயகர் களஞ்சியம்**
**இலுப்பையடி வீதி, மட்டுவில் மத்தி,**
**சாவகச்சேரி**


### பேராசிரியரானார்...

பொது மருத்துவ வல்லுநர் திருநாவுக்கரசு குமணன் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ வல்லுநர் திருநாவுக்கரசு குமணனுக்கு மருத்துவத் துறை பேராசிரியர் பதவி நிலை உயர்வுக்கான ஒப்புதலை யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவை நேற்றுமுன்தினம் வழங்கியது.

மறைந்த மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசின் (விகடகவி) புதல்வரான குமணன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் பயின்று 2000ஆம் ஆண்டு மருத்துவராக வெளியேறினார்.

2008ஆம் ஆண்டு பொது மருத்துவ வல்லுநராக தேர்ச்சி பெற்ற திருநாவுக்கரசு குமணன், 2010ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முதுநிலை விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார்.

2010ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத் துறை தலைவராக பொது மருத்துவ வல்லுநர் குமணன் சேவையாற்றினார்.

இந்த நிலையில் மருத்துவத் துறை பேராசிரியராக அவரது பெயர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவைக்கு முன்மொழியப்பட்டது. அதற்கு பேரவை ஒப்புதல் வழங்கியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலையில் மருத்துவ பீடத்தின் மூன்றாவது பேராசிரியராக விளங்குகிறார்.

(ஓ,5)

### அழுகுரல்களால்...

பகுதியிலும், 2006ஆம் ஆண்டு ஏ9 நெடுஞ்சாலை மூடப்பட்ட பின்னரும், இறுதிப் போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்தும் பல ஆயிரக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டனர். தசாப்தங்கள் கடந்தும் தங்கள் அன்புறவுகளுக்கு என்ன நடந்தது என்று கோரி உணர்வுபூர்வமாக நேற்று நடத்த போராட்டத்தில் அரசியல் பேதங்களைக் கடந்து பலரும் கலந்து கொண்டனர். பொதுமக்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் பங்கேற்றனர். (ஓ.5,6,20,26)

(விரிவான செய்தி பக்:3)

### வடக்கில்...

உள்ளிட்ட சகல இடங்களிலும் 60 சதவீதமான சிங்களத் தாதியர்களே பணியாற்றுகின்றனர். அவர்கள் சுழற்சி முறையில் இடமாற்றம் பெற்றுச் சென்றாலும், அந்த இடங்களுக்கு திரும்பவும் சிங்களத் தாதியர்களே பணிக்கு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

தாதிய சேவைக்கு தமிழர்கள் விண்ணப்பிப்பது குறைவடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் இயங்கும் தாதிய பாடசாலைக்கும் அதிகளவான சிங்கள மாணவர்கள் விண்ணப்பித்து இணைந்துள்ளனர். (ஓ,5)


## இனிய நினைவுகளுடன் 8 ஆம் ஆண்டு



**திருமதி யோகமலர் (மம்மி)**
**இரத்தினசிங்கம்**



மண்ணில் 31.10.1947 — விண்ணில் 30.08.2012

**திதி: 31.08.2020 சதுர்த்தசி**

மம்மி உன் ஞாபகத்தில் என்றும் நாம்
வெதும்பி வெதும்பி அழுகின்றோம்
வேதனையில் தவிக்கின்றோம்
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஒளிர்கின்றீர்கள் பாசத்தை அள்ளிக்கொடுத்தாய்
பாசத்தின் பரம்பொருளே
எம்மை காக்கும் கடவுள் அம்மா ! மம்மி உன் அன்பின் ஆழம்
தான் இன்றும் எம் விழியோரங்களில்
கண்ணீர்த்துளிகளாய் கசிகின்றது எம் அருகில் நீ இருந்த ஒவ்வொரு நொடிகளையும்
இன்னும் ஒரு தடவை மனதார உணரவேண்டும்
மம்மி என்று உன்னை மறுபடியும் அழைக்கவேண்டும்
மறுஜென்மம் என்றொன்று மறக்காமல் மலரவேண்டும் எம் அன்பு மம்பிக்கு
- ஆசை முத்தங்கள் பல கோடி
கனவிலும் நினைவிலும் நீங்களே அன்புதெய்வம்

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையின் நிமித்தம் இன்று (31.08.2020) திங்கட்கிழமை 41 Selbourne Avenue, Surbiton, Surrey KT67NR இல் ஆத்ம சாந்திக் கிரியைகள் நடைபெறும்.

**உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பதினர்.**

**கணவர் (இலங்கை) 077 754 8710**
**மகன் (லண்டன்) 077 11984055**



## மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்

**31.08.2020**

**அமரர் இ.அருள்நேசன்**



(முன்னாள் எழுதுவினைஞர் மக்கள் வங்கி - மன்னார்,
போதகர் கிறிஸ்தவ குடும்பசபை - யாழ்ப்பாணம்)

கணப் பொழுதும் கைவிடாமல் கண்ணை
- இமைகாப்பது போல
காத்து வந்தீர்கள் கண் இமைக்கும் பொழுதில் கைவிட்டு
- சென்றீர்களோ
கண்கலங்காது காத்த நீங்கள் கண்ணீர் கடலில்
- மூழ்க வைத்தீர்களே
கண்ணீரும் தீரவில்லை காத்து நடத்த
- யாருமில்லை - அப்பா
வாழவும் முடியவில்லை வழியும் தெரியவில்லை
வழிமேல் விழிவைத்து காத்திருக்கிறோம்
எங்கள் கண்ணீர்துடைக்கவந்து விடுங்கள் விரைவாக

**மனைவி, மகள்.**
**200, சென்ற் பெனடிற்றோட், அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்**

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான
தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்
யாழ். **கலாலயா** பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி
ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)





மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- **கேக் ஐசிங்** – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- **உணவு தயாரித்தல்** – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- **கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்** 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.





- FACIALS (10 வகை), GALVANIC FACIAL, Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- BRIDAL DRESSINGS (மணமகள் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, சவர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.



பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

புதிய பிரிவுகள் ஆரம்பம் 07.09.2020 திங்கள்


மேலும் விபரங்களை மாலை 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

Guru

# பெரும்பான்மையால் அரசு ஆடமுடியாது

## சஜித் எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 31


மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கம் தவறாகப் பயன்படுத்துகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக் காட்டியுள்ளார்.

வட கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுத் தேர்தலில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளது என்ற காரணத்தால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. மக்களை ஒன்று திரட்டி கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். மக்களின் உரிமைகளையும், நிவாரணங்களையும் பலமான எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு பெற்றுக் கொடுப்போம் என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்கின்றோம் என்றார். (ப-க)

# பதவி விலகினார் டி.யூ.குணசேகர



சிறிலங்கா கொமியூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து முன்னாள் அமைச்சர் டி.யூ.குணசேகர விலகியுள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு அது குறித்து அவர் அறிவித்த பின்னர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

சிறிலங்கா கொமியூனிஸ்ட் கட்சியின் புதிய தலைமைத்துவத்துக்கு விசேட மருத்துவ நிபுணர் ஜிவீரசிங்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. கட்சியின் செயற்குழு அந்தப் பிரேரணையை ஏகமனதாக அங்கீகரித்துள்ளதாகவும் அதன்படி கொமியூனிஸ்ட் கட்சியின் தலைமைத்துவமான பிரதம செயலாளர் பதவிக்கு விசேட மருத்துவ நிபுணர் ஜி.வீரசிங்க நியமிக்கப்படுவர் என்றும்கட்சிவிடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பிட்டுள்ளது. (ப-இ)

## மணமகள் தேவை

கிளிநொச்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 பூராடம் 3 ஆம் பாதம் தனுசு இராசியில் பிறந்த மணமகனுக்கு O/L அல்லது A/L படித்த மணமகள் தேவை. மணமகன் சொந்தமாக தொழில் செய்கின்றார். உயரம் 5' - 10"

077 344 9443

## வேலையாட்கள் தேவை

ஊர்காவற்றுறையில் உள்ள பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள்கள் தேவை. வயது 20-40 இற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். ஆரம்ப சம்பளம் 45,000 - 60,000 வரை வழங்கப்படும்.

077 067 4452

## பதவி வெற்றிடம்

யாழ்நகரில் இயங்கிவரும் DSI மொத்த விற்பனை நிலையத்திற்கு வாகனத்தில் பொருள்கள் கொண்டுசென்று விநியோகிப்பதற்கு விநியோக பையன் (Delivery Boys) தேவை. விரும்புவோர்கள் எதிர்வரும் 11.09.2020 இற்கு முன்பாக கீழ்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரக்கோவையை அனுப்பிவைக்கவும்

முகவரி: DSI மொத்த விற்பனை நிலையம்
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கேள்விஅறிவித்தல்
## சபைநிதி -2020
## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.

1) சபைநிதி – 2020 மூலமான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2) தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3) தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4) கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C9/ C8 தரத்தில் கட்டடம் அமைப்பிற்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5) தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023 e.mail – pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை 14.09..2020 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 01.09.2020ம் திகதியிலிருந்து 14.09.2020ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8) கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு 15.09.2020ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
9) கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து எழுபத்தேழு(77- 01.11.2020) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10) கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Plan/coun/Cap/12/15/2020 | பொது மயானங்களில் எரிகொட்டகை அமைத்தல் தேவிபுரம், வேணாவில், மற்றும் மன்னாங்கண்டல். | 1.388 | 45 நாட்கள் | C9/C8 | 14,000 | 29.11.2020 |
| NP/14/44(04)/Plan/coun/Cap/13/16/2020 | பொது மயானங்களில் எரிகொட்டகை அமைத்தல் விசுவமடு, தேராவில், உடையார்கட்டு தெற்கு மற்றும் சுதந்திரபுரம். | 1.845 | 45 நாட்கள் | C9/C8 | 19,000 | 29.11.2020 |
| NP/14/44(04)/Plan/coun/Cap/14/17/2020 | பொது மயானங்களில் எரிகொட்டகை அமைத்தல் புதுக்குளம், இத்திமடு, பழம்பாசி மற்றும் தண்டுவான் | 1.845 | 45 நாட்கள் | C9/C8 | 19,000 | 29.11.2020 |
| NP/14/44(04)/Plan/coun/Cap/15/18/2020 | பொது மயானங்களில் எரிகொட்டகை அமைத்தல் முத்தையன்கட்டு, கூழாமுறிப்பு, மானுருவி, மணவாளன் பட்டமுறிப்பு மற்றும் திருமுறிகண்டி. | 1.845 | 45 நாட்கள் | C9/C8 | 19,000 | 29.11.2020 |
| NP/14/44(04)/Plan/coun/Dev/03/19/2020 | தலைமை அலுவலகத்திற்கு CCTV Camera பொருத்துதல் | 0.400 | 30 நாட்கள் | வடமாகாணத்தில் விநியோகஸ்தர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 5,000 | 29.11.2020 |

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 2020.09.07 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.
12) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை.**
**புதுக்குடியிருப்பு**
**2020.08.31.**

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக
32 வருடகாலம் வணிகத்துறையின்
முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு
ஓய்வுபெறும் யாழ்ப்பாண கல்வி
வலயத்தின் வணிகத்துறை ஆசிரிய
ஆலோசகர்
**உயர்திரு. சிவஞானசுந்தரம் ஞானசேகரம்**
அவர்களின் சேவைநலனை பாராட்டுவதுடன் அவரது ஓய்வுகாலம் சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: திரு. ந. மனச்சந்திரன்
திரு. த.நவீந்திரன்
திரு. தே.செந்தூரன்.

# வாழ்த்துகின்றோம்




முதுநிலை பேராசிரியர் மதிப்பிற்குரிய

## சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா

(துணைவேந்தர் - யாழ் பல்கலைக்கழகம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவியேற்றிருக்கும் முதுநிலை பேராசிரியர் மதிப்பிற்குரிய சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்களிற்கு வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் சார்பாக இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முதுநிலை பேராசிரியர் துணைவேந்தர் மதிப்பிற்குரிய சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்களே!**

கால் நூற்றாண்டுக்கு மேலாக யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக முழுமையான அர்ப்பணிப்புடன் தமிழ்த் தேசிய உணர்வோடு பணி யாற்றியிருக்கின்றீர்கள்.

அறிவியற் துறையில் ஏற்பட்டிருக்கும் ஏற்ற இறக்கங்களை நன்கு அறிந்து உலகின் முதற்தர உயர்கல்வி நிறுவனங்களில் ஒன்றாக யாழ் பல்கலைக்கழகத்தினை முன்னெடுத்துச் செல்வீர்கள் என்ற முழுமையான நம்பிக்கைகளுடன் தமிழ்சமூகம் உங்களை பெருமையுடன் வரவேற்கின்றது.

**இச் சந்தர்ப்பத்தில் பின்வரும் விடயம் ஒன்றினை தங்கள் கவனத்திற்கு முன்வைக்கின்றோம்.**

விளையாட்டுத் துறைகளில் ஈடுபடும் வடமாகாண மாணவர்களின் உயர் கல்விக்காக முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்த உடற்கல்வி கற்கைநெறி கடந்த ஏழு வருடமாக எவ்வித கற்பித்தல் செயற்பாடுகளும் இல்லாமல் உறங்கு நிலையில் இருப்பதனை தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

பல வருடங்களாக எடுக்கப்பட்ட முயற்சிகளின் பலனாக தற்பொழுது கல்வி அமைச்சின் அனுமதியின் ஊடாக இவ் வருட இறுதிப்பகுதிக்குள் இக் கற்கைநெறியினை மீளவும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை உடற்கல்வி கற்கைநெறியின் பகுதி தலைவர். மற்றும் துறைசார் முதுநிலை விரிவுரையாளர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களின் முயற்சிகளிற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வழிநடத்தவேண்டும் எனவும் தாங்கள் துணைவேந்தராக பணியாற்றவிருக்கும் காலத்தில் எவ்வாறாயினும் இக் கற்கைநெறியினை மீளவும் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் தரம் உயர்த்துவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவேண்டுமெனவும் வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் சார்பாக தங்களிடத்தில் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் சார்பாக**
**நாகராஜா விஜயகுமார் - சுவிற்சர்லாந்து.**


## சீறிப் பாய்ந்த காளைகள்





வட்டுக்கோட்டை, கொத்துத் தரவை சாவாரித் திடலில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நேற்று கோலகலமாக இடம்பெற்றது. ஐந்து பிரிவுகளாக போட்டி இடம்பெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ப-1)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations Congratulations

**"ஹாட்லியின் மைந்தன்"**

## பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா




அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
துணைவேந்தராகப் பதவியேற்றமையினையிட்டுப்
பேரானந்தமடைவதோடு
கணித மேதாவளியின் தற்புதுமையான
முன்னெடுப்புகள் மீயுச்சந் தொட்டு
வான்புகழ் காணவேண்டுமென்று
உள்ளன்போடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**தொன்ம நூதனமாய் ஜென்ம சாஸ்வதமாய்**
**சர்வ மேதினியைக் காக்கும் ஹாட்லித்தாய்**
**பன்மைத் தகுநயத்தில் பெற்ற வித்தகரே!**
**கணிதப் பெருங்கடலின் புனிதக் கலங்கரையே!**

**நுங்கின் சுவைமொழியே! நேர்மைச் செல்நெறியே**
**நீதி விழுமியமே! நீங்கள் பணிதொடர**
**கங்குல் விலகிவிடும்... கல்விச்சுடர் மிளிரும்**
**கனதிச் சாதனைகள் மண்ணில் மொட்டவிழ்க்கும்**

**வெற்றி ஆரணமே ! நிர்வாக பூரணமே!**
**விந்தைச் சுறுசுறுப்பில் விடிந்த வைகறையே**
**'சற்றும் சுயமிழக்கா சாகசப் பெருநெருப்பே**
**வியந்து வாழ்த்துகிறோம் ஆளுமை போற்றுகிறோம்.**

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/ ஹாட்லிக்கல்லூரி**

# மரண அறிவித்தல்



தோற்றம்
16 • 08 • 1946

மறைவு
29 • 08 • 2020

## ஓவியர் ஆசை இராசையா

(ஓய்வுநிலை ஆசிரியர்-கொழும்பு றோயல் கல்லூரி,
வருகை விரிவுரையாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பண்டாரக்குளம் நல்லூரை வசிப்பிடமாகவும் இராமலிங்கம் வீதி, 447 இலக்கத்தில் தற்காலிகமாக வசித்து வந்த வருமான ஆசை இராசையா கடந்த (29.08.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசை செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், பொ.தியாகராசா காலஞ்சென்ற சிவமணி தம்பதியரின் அருமை மருமகனும், ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், காயத்திரியின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரனின் பாசமிகு மாமனாரும், ஆ.உதயகுமார், க.அருந்தவதேவி, க.மஞ்சுளாதேவி ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும், ஜெயந்திமாலா, கனக லிங்கம், காலஞ்சென்ற கலைதாசன் சிவஞானராஜா, காலஞ்சென்ற பொன்ராஜா, தேவானந்தராஜா, ஜெயராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கீர்த்தனன், அபிநயன் ஆகியோரின் பெரியப்பாவும், சாம்பவி, சாரங்கி, கௌதமன், சிவானு ஜன், கௌசிகன், சங்கவி, ராகவி, சாதனா, கௌரீசன், ஹாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2020) திங்கட்கிழமை அவரது இராமலிங்கம் வீதி தற்காலிக இல்லத்தில் பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

447, இராமலிங்கம் வீதி,
நல்லூர்.
077 218 4384

தகவல்:
வி.ஸ்ரீதரன் (மருமகன்)

# உலகளவிலான அதிகபட்ச பாதிப்பு இந்தியாவில் பதிவு

புதுடில்லி, ஓக. 31

இந்தியாவில் இதுவரையில்லாத வகையில் கடந்த 24 மணிநேரத்தில் 78 ஆயிரத்து 761பேர்கொரோனாவால்பாதிக்கப்பட்டுள்ளனர், இதையடுத்து இந்தியாவில்கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 35 லட்சத்து 42 ஆயிரத்து 733 ஆக அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் உலகளவில் இதுவரை ஒரே நாளில் பதிவாகிய அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கையாகவும் இது காணப்படுகிறது. (வ)

சேவை
ESONE ஈசன்ஸ்
021 222 2695
076 584 6523
நேரடித் தொடர்பு
VIP சேவிஸ் 077 366 1681

# மரண அறிவித்தல்



## சிவப்பிரகாசம் தவமணி

அராலி மத்தியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் தவமணி நேற்று (30.08.2020) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மணிமேகலா, சிவமேகலா மற்றும் அரவிந்தன், ஜெயரவீந்திரன், பிரதாபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

துயன் - 077 959 2021, பாபு - 075 557 3477 வாசன் - +447450238926

# மரண அறிவித்தல்



தோற்றம்
01 • 03 • 1949

மறைவு
30 • 08 • 2020

## முருகேசு ஜெயசிங்கம்

(ஓய்வுபெற்ற வெளிக்களப் போதனாசிரியர்,
கமநல சேவைகள் திணைக்களம்-பூநகரி)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஜெயசிங்கம் நேற்று (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் மருமகனும், இந்திராதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், ஜசிந்தன் (ஜேர்மனி), மிதிலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிறோஜி (ஜேர்மனி), சுரேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனுஷன், ஜனனி, ஈஷ்வா, ஜாஷ்னா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, இராசயோகம் மற்றும் கனகரத்தினம், மகேஸ்வரராஜா (கனடா), இராசலட்சுமி, புவனலட்சுமி (கனடா), விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகராசா மற்றும் தற்பராதேவி (கனடா), தேவராசா (ஜேர்மனி), செல்வராசா, ரேணுகாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.08.2020) திங்கட்கிழமை மட்டுவில் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக நேரியகுளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 077 637 2221
077 1133 191

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



பிறப்பு
16 • 04 • 1975

இறப்பு
30 • 08 • 2020

## திருமதி கஷமுகன் கந்தஜோதி

நீர்வேலி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கஷமுகன் கந்தஜோதி நேற்று (30.08.2020) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தில்லையம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் சிவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், கஷமுகனின் அன்பு மனைவியும், மதுசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன்), சாருகா (யாழ்ப்பாணம் இந்து மகளீர் கல்லூரி மாணவி), இந்துசன் (மாணவன், யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ராமஜோதி மற்றும் சிவகுமார், சிவறஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2020) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

தகவல்:
கணவர் - சி.கஷமுகன்
077 457 4608

## உறவுகளைக்...

ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கிடைக்கும் வரை சொந்தங்களின் ஜன நாயகப் போராட்டங்கள் தொடர வேண்டும். இதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்கள் தினமான நேற்று திருகோணமலையிலும் அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக தங்களது உறவுகளுக்கு நீதி வேண்டி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். இந்த அமைதிவழிப் போராட்ட இடத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் சென்றார். அவர் அங்கு போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன் பின்னர் 'உதயன்' பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது உறவுகள் காணாமல்போகவில்லை. அவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இதுதான் உண்மை.

எமது உறவுகள், அரச படைகளிடம் சரணடைந்த பின்னர் அல்லது அரச படைகளினால் கைதுசெய்யப்பட்ட பின்னர் அல்லது அரசின் ஆதரவுடன் இயங்கிய ஆயுதக்குழுக்களால் கடத்தப்பட்ட பின்னர்தான் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இதை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்றே நாம் கூற வேண்டும்.

இது அரசுடன் சம்பந்தப்பட்ட விடயம். தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் எமது உறவுகள் அதிகளவில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் சொந்தங்கள் நடத்தும் ஜன நாயகப் போராட்டங்கள் தொடர வேண்டும். அரசு பொறுப்புக்கூறும் வரை நீதி கிடைக்கும்வரை இந்தப் போராட்டங்கள் தொடர வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சொந்தங்களுக்குப் பரிகாரம் வழங்குவதற்காக கடந்த ஆட்சியில் காணாமல் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அலுவலகத்துக்கு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவகத்தின் ஊடாகப் பரிகாரம் வழங்குவதற்கு சட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றை மஹிந்த அரசு இயங்கவைப்பது அத்தியாவசியம்.

உறவுகளைத் தேடிப் போராடும் சொந்தங்களின் துன்பங்கள், துயரங்களுக்குப் பரிகாரம் காணப்பட வேண்டும், என்றார். (ஓ.5,22)

## சவேந்திர...

தொடர்பில் இலங்கையின் இப்போது இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஒரு தசாப்தம் கடந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்படாமை கேலிக்குரியது. இவ்வாறு சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் (ஐ.ரி.ஜே.பி.) பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான தேடலில் ஈடுபட்டமைக்காக இளம் தமிழ் செயற்பாட்டாளர்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் குறைந்தது 15 பேருக்கு 2015ஆம் ஆண்டிலிருந்து பிரிட்டனில் மாத்திரம் அகதி அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டவர்கள் மனித உரிமைகள் பற்றிய முக்கிய செயற்பாட்டாளர்களல்ல. இவர்கள் பெயர்களைச் சேகரித்த அல்லது ஆர்ப்பாட்டங்களுக்கு உதவி செய்த அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு முறைப்பாட்டை பதிவு செய்வதற்கு உதவி செய்த இளைஞர்கள். இவர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பெரிய ஆபத்துக்கள் பற்றி எந்தவித எண்ணத்தையும் கொண்டிருக்கவில்லை.

'நான் பதின்ம வயதினனாக இருப்பதனால் இராணுவம் என் மீது எந்த அக்கறையும் கொண்டிருக்காது என தனக்கு சொல்லப்பட்டதாக ஒருவர் தெரிவித்தார். தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அவர்கள் குதிக்காலில் அடித்தல், பாலியல் உறுப்புக்கள் மீது தாக்குதல் நடத்துதல், சிகரெட்டினால் சுடுதல், சூடாக்கப்பட்ட ஒரு இரும்புக்கம்பியால் சூடு வைத்தல், தண்ணீர் சித்திரவதை, மூச்சுத்திணறச் செய்தல், வலி ஏற்படும் விதமான நிலையில் கட்டித்தூக்குதல், போலி மரண தண்டனைகள், மரண அச்சுறுத்தல்கள் அத்துடன் கூட்டுப் பாலியல் வன்புணர்வு உட்பட்ட பாலியல் வன்புணர்வு போன்ற மிருகத்தனமான சித்திரவதைகளை பாதுகாப்பு படைகளின் கைகளில் அனுபவித்துள்ளார்கள்.

தமக்கு உரித்துடைய நீதியைக் கேட்கும் செயல்முறையில், இந்தக் குடும்பங்கள் பல தடவைகள் பலியாக்கப்படுள்ளார்கள். 'உண்மையைக் கண்டறிவதில் அக்கறை எதுவுமே கொண்டிராத ஒரு அரசே இதற்கான முழுப் பொறுப்பையும் கொண்டுள்ளது' என்று சூக்கா தெரிவித்துள்ளார்.

'நிலைமாறுகால நீதி ஒன்று இருப்பதாக எண்ணும் சர்வதேச சமூகமானது நீதியைக் கோரும் குடும்பங்களுக்கான ஒரு தார்மீகப் பொறுப்பை தற்போது கொண்டுள்ளது. புதிய அரசுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்துவதற்காக அரசியல்வாதிகளுடனும் ஜெனரல்களுடனும் கை குலுக்குவதற்கு வரிசையில் நிற்பதற்குப் பதிலாக கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் உண்மைக்காக காணாமற்போனவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களது துணிச்சலான சட்டவாளர்களது தாகத்தை பாதுகாப்பதற்கும் தமது தொடர்ச்சியான ஆதரவை வெளிக்காட்டவும் அவர்களுடன் நின்று படம் எடுத்துக் கொள்ள வேண்டும், என்று அவர் மேலும் தெரிவித்தார்.

திகைக்கவைக்கும் வகையில், பாதிக்கப்பட்டவர்கள் மீது முற்றிலும் வெறுப்பை வெளிக்காட்டும் வகையில், ஊடகத் துறை அமைச்சர் ரம்புக்வெல இலங்கையிலுள்ள காணாமற்போனவர்களுக்கான அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் உள்ளவர்களில் அரைவாசிப் பேர் உண்மையில் வெளிநாடுகளில் வசித்து வருகின்றார்கள் என்று கூறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகமானது தனிப்பட்ட நபர்கள் பற்றிய 14 ஆயிரத்து 641 கோவைகள் தம்மிடம் இருப்பதாகவும் அத்துடன் 129 மேலதிக புதிய முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் ஐ.நாவுக்கு அறிவித்துள்ளது.

'காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அனுபவித்துவரும் முடிவில்லாத துன்பங்களை கடுமையான மற்றும் அவமரியாதையான முறையில் நிராகரித்து அவர்களை இழிவுபடுத்தும் ஆதாரமற்ற கருத்துக்களை வெளியிட்டமைக்கான இந்த அமைச்சர் விளக்கமளிக்க அழைக்கப்படுதல் அவசியமாகும். 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது பிள்ளைகள் அல்லது தாயாரை தொடர்பு கொள்வதைப் பற்றி கவலைகொள்ளாமல் இருப்பது எவ்வாறு சாத்தியமாகும்? காணாமற்போனமை பற்றி அறிவிப்பதால் அதிகாரிகளிடமிருந்து கண்காணிப்பு மற்றும் தொந்தரவு மட்டுமே ஏற்படும் நிலையில் இலங்கையில் உள்ள குடும்பங்கள் அவர்களைக் காணவில்லை என என்ன நோக்கத்துக்காக அறிவிப்பார்கள், என்றும் சூக்கா கேட்டுள்ளார். (ஓ.5)

## காணாமல்...

ருக்கலாம். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் என்று தமிழ்த் தரப்பினர் கூறும் விவகாரத்துடன் அரசுக்கும் இராணுவத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களையும், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களையும் புனர்வாழ்வின் பின்னர் அரசு விடுவித்துவிட்டது.

போர்க்களத்தில் காணாமல்போனோர் உயிரிழந்திருப்பார்கள். அவர்களை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் என்று எப்படிக் கூற முடியும்?

போர் நடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து தப்பி வந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாம். அவர்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் என்று எப்படிக் கூற முடியும்?

அதேவேளை, தனிப்பட்ட நபர்களினால் கடத்தப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம். அதற்கும் அரச படைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை, என்றார். (ஓ.5,22)

## யாழ்.நகர்ப்...

போதும் அதில் பங்கேற்காது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழ்ப்பாண நகரில் முன்னெடுத்த போராட்டத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான மணிவண்ணன் பங்கேற்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொறுப்புக்களிலிருந்து நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு மணிவண்ணன் வெளியியேற்றப்பட்டிருந்தார். இருப்பினும் அந்தப் பொறுப்புக்களில் தானே தொடர்வதாக அவர் ஊடக சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், யாழ்ப்பாண நகரிலிருந்து மாவட்டச் செயலகம் வரையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் மணிவண்ணன் பங்கேற்று ஆதரவு வழங்கினார்.

இதேவேளை, இந்தப் போராட்டத்தைக் குழப்பியடிக்கும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியானதொரு போராட்டத்தை நல்லூரில் நடத்தியது. (ஓ.5)

## கொரோனா...

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாட்டுக்குத் திரும்பியிருந்த இருவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து இதுவரை இரண்டாயிரத்து 860 பேர் முழுமயாகக் குணமடைந்துள்ள நிலையில், 128 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். வைரஸ் தொற்றால் இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளனர். (ஓ.ப)

## 4ஆம் மாடியிலிரு...

தலையில் வெடிப்பு ஏற்பட்டு உணர்வற்ற நிலையில் காணப்பட்டார். உடனடியாகவே மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டபோதும் அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவமனைத் தரப்பு தெரிவித்தது.

பளையைச் சேர்ந்த பரமேஸ்வரன் குருசு (வயது 39) என்பவரே உயிரிழந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தாய்.

நாலாம் மாடியிலுள்ள 14ஆம் விடுதியில் அவர் பணியில் ஈடுபட்டிருந்தவேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்பத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை பெண்ணின் சாவில் தமக்குச் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அவர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்கும் எந்தச் சூழ்நிலையும் இல்லை என்றும், தவறி விழுந்து உயிரிழப்பதற்குரிய நிலைமைகள் எதுவும் அவர் பணியில் ஈடுபட்டிருந்த இடத்தில் இல்லை என்றும் அவர்கள் இறப்பு விசாரணையின் போது தெரிவித்துள்ளனர். உடற்கூற்றுப் பரிசோதனையில் உடம்பில் இரண்டு இடங்களில் சிறிய காயங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. (ஓ,த.26)

## யானை...

தாக்கியதில் 3 பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளிக்குளம் பரியாரியூரைச் சேர்ந்த சசிகுமார் கௌசல்யா (வயது 38) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் காட்டுப் பகுதிக்குள் செல்லும் போது யானை தாக்கியிருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. அவரது சடலம் நேற்றுக் காலையே கண்டு பிடிக்கப்பட்டது. சடலத்தை மீட்ட மடுப் பொலிஸார் அதனை பண்டிவிரிச்சான் மருத்துவமனையில் ஒப்படைத்தனர். (ஓ.5,56,110)

## போராட்டத்தைக்...

வைக்கும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாக ஓர் போராட்டத்தை நல்லூரில் நடத்தியது.

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளின் போராட்டம் நகரில் இடம் பெற்ற அதே நேரத்தில் இந்தப் போராட்டம் அங்கு இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் அவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்த ஒளிப் படங்கள் சமூக வலைத் தளங்களில் வெளியாகின. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைத் தேடி வரும் நிலையில், இவ்வாறு மலர் தூவி அஞ்சலி செலுத்தியமை தொடர்பில் பலத்த கண்டனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ஓ.5)

# சம்பியனானர் ஜோகோவிச்



நியூயோர்க், ஓக.31
சின்சினாட்டி பகிரங்க ரென்னிசின் இறுதிப்போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச், கனடா வீரர் ராவ்னிக்கை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். சின்சினாட்டி பகிரங்க சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் உலகின் தலைசிறந்த முதன்மை வீரரான நோவக் ஜோகோவிச், கனடாவை சேர்ந்த மிலோஸ் ராவ்னிக்கை எதிர்கொண்டார். இதில் ராவ்னிக் முதல் செட்டை 1-6 என்ற கணக்கில் கைப்பற்றினார். அதன்பின்னர் அதிரடியாக ஆடிய ஜோகோவிச் அடுத்த 2 செட்களையும் கைப்பற்றி அசத்தினார்.
இறுதியில், ஜோகோவிச் 1-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ராவ்னிக்கை வீழ்த்திய துடன், சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றினார். (ற)



# சுழற்கேடயத்தை சுவீகரித்தது ஐயனார் கழக

வவுனியா, ஓக.31
மாபெரும் கடினபந்து துடுப்பாட்ட போட்டியில் சுழற்கேடயத்துக்கான கிண்ணத்தை ஐயனார் விளை யாட்டுக்கழகம் சுவீகரித்துக்கொண்டது. வன்னி மாவட்டத்தின் சுழற்கேடயத்துக்கான கடினபந்துத் துடுப்பாட்டப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
ஐயனார் விளையாட்டுக்கழகத்துக்கும் ஜங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் தொடர்ச்சியாக நான்கு வருடங்களாக இந்தச் சுற்றுப்போட்டி இடம்பெற்று வருகின்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஐயனார் விளையாட்டுக்கழகம் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி துடுப்பெடுத்தாடிய ஜங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் 29.2 என்ற பந்துபரிமாற்றங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டனர்.
பந்துவீச்சில் ஐயனார் விளையாட்டுக்கழகம் சார்பாக கவிராஜ் 4 இலக்குகளையும், சத்தியராஜ் 3 இலக்குகளையும் பெற்றுக்கொண்டனர். 93 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஐயனார் விளையாட்டுக்கழக அணி 12.5 என்ற பந்துப்பரிமாற்றத்துக்கு மூன்று இலக்குகளை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் இருந்து மிதுன் 42 ஓட்டங்களையும், அனுசன் 26 ஓட்டங்களையும் பெற்று அணியினை வெற்றிக்கு இட்டுச்சென்றனர். (ற-110)



கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியன் பட்டம் வென்றது. இந்தப் போட்டி வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக மகளிர் அணியும், கருணாகரன் விளையாட்டுக்கழக மகளிர் அணியும் மோதின. இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக மகளிர் அணி 20:7 என்ற கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ற-108)

# சம்பியனானது சீ.ஆர்.சீ கழகம்

சாவகச்சேரி, ஓக.31
தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விளையாட்டு விழாவில், சீ.ஆர்.சீவிளையாட்டுக் கழகம் சம்பியனானது.
இந்த விளையாட்டு விழாவானது பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில், மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.
இதில் சாவகச்சேரி சீ.ஆர்.சீ.விளையாட்டுக் கழகம் 17 தங்கப் பதக்கங்களை வென்று இந்த வருடத்தின் பிரதேச சம்பியனாகியது.
10 தங்கப்பதக்கங்களை வென்று கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழகம் இரண்டாவது இடத்தையும், 9 தங்கப் பதக்கங்களை வென்று மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் மூன்றாமிடத்தையும் கைப்பற்றின. (ற-9)

# சென்னை சூப்பர் கிங்ஸ்: 13 பேருக்குக் கொரோனா



ஐ.பி.எல் தொடரில் விளையாட சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கடந்த 21 ஆம் திகதி தங்களது ஒட்டுமொத்த அணியுடனும் டுபாய் சென்றது. ஆறு நாள்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிறகு பயிற்சியை ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகத்தில் 13 பேருக்கு கொரோனா கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் சென்னை அணி மேலும் ஒரு வாரத்துக்கு அதாவது செப்ரெம்பர் 1 ஆம் திகதி வரை தனி மைப்படுத்தப்பட முடிவுசெய்யப்பட் டுள்ளது. மேலும் யார் யார் கொரோ னாவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாக வில்லை. இது தொடர்பில் சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகி தெரிவித்ததாவது, சென்னை அணியில் இடம் பெற்றிருக்கக் கூடிய இந்திய வீரர் ஒருவருக்கும், மூத்த நிர்வாகி ஒருவருக்கும் கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் எத்தனை பேரைக் கொரோனாத் தொற்று பாதித்தது என்று எனக்கு முழுமையாகத் தெரியாது. முழுத்தகவலும் கிடைத்த பின்னர் நான் உங்களுக்கு தெரிவிக்கிறேன் -என்றார். (ற)

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
இலவச
கருத்தரங்கு-2020
A/L தொழில்நுட்பபிரிவு
September - 5,6
8.00am - 2.30pm
ஆசிரியர்கள்
சக்தி
முருகநிரோஜன்
ராகவன்
லவேந்திரன்
அனுமதி இலவசம்
(Full model papers - 01)
(50Mcq, 4 Structure and 6 Essay)
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்
077 017 5346, 077 170 3549

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
DHL
சகல நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.